Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 12

விலை: ரூபா 7.00

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி–14 | 28–06–2004 | திங்கட்கிழமை | ஓசை –131

உங்களிடம் தேவை இருக்கிறது
எங்களிடம் கைதேர்ந்த நகைத்
தொழிலாளர்கள் இருக்கின்றார்கள்

கணேசா நகையகம்
194,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
123,பஜார் வீதி, வவுனியா.
(சி-9599)

# ஹொவ்டே – தமிழ்ச்செல்வன் சந்திப்பில்

# கிழக்கின் நிலவரம் குறித்து முக்கிய பேச்சு!

## இன்றுகாலை கிளிநொச்சியில் இடம்பெறும்

(கொழும்பு)

**யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் டொன்புறூவ் ஹொவ்டேக்கும்-விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும் இடையிலான இன்றைய சந்திப்பில் கிழக்கின் இன்றைய நிலவரம் குறித்து முக்கியமாக விவாதிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் டொன் புறூவ்ஹொவ்டே விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இன்று சந்தித்துப் பேசவுள்ளார். கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் காலை இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது. இச்சந்திப்பில் கிழக்கில் விடுதலைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்றில் கைக்குண்டுவீச்சில் கணவனும், மனைவியும் உயிரிழப்பு

அம்பாறை அக்கரைப் பற்றுபகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.. உயிரிழந்தவர்கள் கணவனும், மனைவியும் எனக் கூறப்படுகிறது. இவர்களது குழந்தை உயிர்தப்பியுள்ளதாகத் தெரியவருகிறது. ஒருசில தினங்களுக்கு முன்னர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுபிணையில் விடுதலையானவரே இவ்வாறு கைக்குண்டுத் தாக்குதலில் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கருணாவைப் பாதுகாத்ததில் எந்தவொரு இராணுவத்திற்கும் தொடர்பு கிடையாது

### சிறிலங்காஇராணுவத்தளபதி லயனல் பலகல்ல

(லண்டன்)

கருணாவை பாதுகாத்ததில் எந்த ஒரு இராணுவத்திற்கும் தொடர்பு கிடையாதென சிறிலங்காவின் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார்.

லண்டன் பி.பி.சிக்கு இவ்வாறு தெரிவித்த அவர் இந்தக் குற்றச்சாட்டிற்கு எந்தவித ஆதாரமும் கிடையாதெனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சமாதானப் பேச்சுக்கள் நடைபெறும் அதேவேளை கருணாவைப் பயன்படுத்தி கிழக்கு மாகாணத்தில் இராணுவ ரீதியில் படிமானத்தைத் தளர்த்த இராணுவம் முயற்சிப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்த தாகக் கூறும் குற்றச்சாட்டையும் மறுத்துள்ள பலகல்ல,

சமாதான முயற்சிகளை சீர்குலைக்கும் வகையில் இராணுவம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தினக்குரல் செய்தியாளர் குடும்பத்திற்கு கொலைமிரட்டல்

மட்டக்களப்பில் தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் சிறிலங்காப் படையினரால் கொலை அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இச்சம்பவம் கடந்த வெள்ளி இரவு இடம்பெற்றுள்ளது. தினக்குரல் பத்திரிகையின் மட்டக்களப்புச் செய்தியாளரான சம்பியன் வேதநாயகம் என்பவரும் அவரது குடும்பத்தினருமே சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கொலை மிரட்டலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இச்செயற்பாட்டை அடுத்து மட்டக் களப்பில் உள்ள தமிழ் ஊடக வியலாளர்கள் பலத்த அச்சமடைந்துள்ளனர். கடந்த மாதம் 31 ஆம்திகதி மட்டக்களப்பில் படைக்கட்டுப்பாட்டுப் பகுதியில் இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஊடகவியலாளர் ஜி.நடேசன் படுகொலை செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடததக்கது.

### –ஐ.ம.சு.மு அரசு கொண்டுவரும்–

## மதமாற்றத் தடைச்சட்டத்துக்கு ஜாதிக ஹெல உறுமய ஆதரவளிக்கும்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தால் பாராளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ள மதமாற்றத் தடைச்சட்டத்துக்கு ஆதரவு வழங்கப் போவதாக ஜாதிக ஹெல உறும்ய தெரிவித்துள்ளது. சட்டவிரோத மதமாற்றங்களைத் தடுக்கும் வகையில் மதமாற்றத் தடைச்சட்ட நகல் ஒன்றினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதாக ஜாதிக ஹெல உறுமய ஏற்கனவே

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள் பங்குகொள்ளும் எந்நிகழ்விலும் பங்கேற்பதில்லை

### அஸ்கிரிய பீடாதிப்தி உடுகமபுத்தரத்கிததேரர்

(கொழும்பு.)

அமைச்சர்கள் பங்கு கொள்ளும் எந்த ஒரு நிகழ்வுகளி லும் தாம் பங்கேற்கப்போவதில்லை என சிறிலங்காவின் அதியுயர் பௌத்த மதப்பிரிவுகளில் ஒன்றான அஸ்கிரிய பிரிவின் உயர் பௌத்த மத குரு உடுகம புத்தரதத்திததேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று தம்மைச் சந்தித்த ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல் பீரிஸிடம் இந்தக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.கடந்த பாராளுமன்ற அமர்வின் போது அரசாங்கத் தரப்பினர் பௌத்த மதகுருமாரின் மீது மேற்கொண்ட தாக்குதல் சம்பவமானது பௌத்தத்திற்கு இழைத்த பாரிய துரோகச் செயலாகும். எனவே அமைச்சர்கள் பங்கேற்கும் எந்த நிகழ்விலும் தாம் பங்கேற்கப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார். அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவை கைது செய்ய அரசாங்கம் முறப்பட்ட விதமும் பிழையானது என அவர் குறிப்பிட்டுள்ளார். (32)

## இணைப்பு

27.06.2003. அன்று சர்வதேச கடற்பரப்பில் ஏற்பட்டபடகுவிபத்தில் வீரச்சாவடைந்த நான்கு கடற்கரும்புலிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் வெளியீடு இன்றைய ஈழநாதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## கொழும்பில் 17 அரச கட்டடங்களின் பாதுகாப்பிற்கு அரசு ஏற்பாடு

(கொழும்பு)

கொழும்பின் 17 அரசாங்க கட்டடங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த சிறிலங்காப் படையினரால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. புலனாய்வுப் பிரிவினரின் பரிந்துரையின் அடிப்படையிலேயே இந்த நகர்வு மேற்கொள்ளப்படுகிறது. இதன் அடிப்படையில் சிறிலங்காப் படையினரின் பரிந்துரைக்கு உட்பட்டு பாதுகாப்பு ஊழியர்கள் இந்த அரசாங்க கட்டடங்க்ளில் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இதற்காகச் சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது. (32)

### -முல்லைக்கடற்பரப்பில்-

## கடற் றொழிலுக்குச் சென்ற இருவரைக் காணவில்லை

(முல்லைத்தீவு)

அளம்பில் கடற்கரையில் இருந்து தொழிலுக்குச் சென்ற இரண்டு மீனவர்கள் காணாமல் போயுள்ளனர்

சென்ற வெள்ளி பிற்பகல் தொழிலுக்குச் சென்ற,அளம்பிலில் வசிக்கும் உடப்பைச் சேர்ந்த நல்லமுத்து கருணாநிதி,மயிலிட்டியைச் சேர்ந்த சந்திரமோகன் பார்த்தீபன் ஆகிய இருவருமே காணாமற் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச கடற்பரப்பில் படகு விபத்தில் நான்கு கடற்கரும்புலிகள் வீரச்சாவு

27-06-2003 அன்று சர்வதேச கடற்பரப்பில் ஏற்பட்ட படகு விபத்தின்போது நான்கு கடற்கரும்புலிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

* கடற்கரும்பு-லெப்டினன்ட் கேணல்-யாழினி.
(நாகரத்தினம்-நிரஞ்சினி
தோப்புக்காடு காரைநகர் யாழ்ப்பணம்.)

* கடற்கரும்புலி-லெப்டினன்ட் கேணல்-அமுதம்/ஈழப்பிரியா.
(பாலசுப்பிரமணியம்-சுகந்தினி
பன்னாலை, தெல்லிப்பளை யாழ்ப்பாணம்)

*கடற்கரும்புலி-மேஜர்-கதிர்ஓவியன்
(செல்வன்-ஞானேஸ்வரன்
புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன், யாழ்ப்பாணம்)

*கடற்கரும்புலி-கப்டன்-ஈகைவண்ணன்
(குகேந்திரன்-ரமணன்
நந்தாவில் அம்மன் கோவிலடி கொக்குவில் மேற்கு யாழ்ப்பாணம்)

ஆகிய கடற் கரும்புலிகளே வீரச்சாவடைந்தவர்களாவர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## வரிவிளம்பரம்

### பைனியர் பொக்ஸ் செற் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள பைனியர் அம்புலிவயர் செற் விற்பனைக்கு உண்டு. விலை- 37500/= இ.நவம் கடை,கண்ணன் கோயில் வீதி, 07ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு. (4659)


## விளையாட்டு விழா

நிராவிப்பிட்டி சுதா முன்பள்ளி சிறார்களின் வருடாந்த திறனாய்வு விளையாட்டு விழா நாளை பி.ப.3.00 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் முன்பள்ளி ஆசிரியை சியாமளா தலைமையில் நடைபெவுள்ளது. (ஆ)

# ஊரக வளர்ச்சிப்பணி மாலைநேரவகுப்பு மாணவரிடையே விளையாட்டுப்போட்டி

## புதிதாக அமைக்கப்பட்ட மைதானத்தில் நடைபெற்றது

ஊரக வளர்ச்சிப் பணியின் மாலை நேர வகுப்பு மாணவர்களுக் கிடையிலான விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளும்,கலை நிகழ்வுகளும் கிளிநொச்சி புதுமுறிப்பில் புதிதாக அமைக்கப்பட்ட விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை கடற்கரும்புலி பாமினியின் தாயார் பார்வதி ஏற்றி வைக்க மங்கல விளக்கினை சோபா நிறுவன திட்டப்பணிப்பாளர் கரோல்ட்,முறிப்பு ஊரக வளர்ச்சிப்பணிப் போராளி திருமகன் ஆகியோர் ஏற்றிவைத்தனர் தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ ஊரகவளர்ச்சிப் பொறுப்பாளர் இ.ம.அன்பரசன் ஏற்றிவைத்தார். அடுத்து அகவணக்கம் முடிவுற்றதும்பொதுமக்களின் உதவியுடன் புதிதாக அமைக்கப்பட்ட உதய சூரியன் விளையாட்டுக்கழக பெயர்ப்பலகையினை சோபா நிறுவன திட்டப்பணிப்பாளர் கரோல்ட் மற்றும் அவருடைய துணைவியார் இருவரும் திரைநீக்கம் செய்து வைத்தனர்.

பின்னர் விளையாட்டு ஒலிம்பிக் தீபத்தினை உதயசூரியன் விளையாட்டுக்கழக தலைவர் தியாகராஜா ஏற்றிவைக்க போட்டியாளர்கள் சத்தியப்பிரமாணம் செய்தனர். அடுத்து வரவேற்புரையினை செல்வாநகர் மாலை நேர ஆசிரியர் கேதீசன் நிகழ்த்த, ஆசியுரையினை முறிப்பு பாடசாலை அதிபர் சிவனொளிபாதம் வழங்கவிளையாட்டுப் போட்டிகளை கிளி.வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் சண்முகராசா மற்றும் தமிழீழ மாணவர் அமைப்பு பொறுப்பாளர் நளன் ஆகியோர் ஆரம்பித்துவைத்தனர்.முதலில் தாச்சி போட்டி இடம் பெற்றது ஆண்களுக்குரிய பிரிவில் செல்வாநகர் அணியுடன் கிருஷ்ணபுரம் அணி களமிறங்கி செல்வாநகர் அணி முதல் இடத்தை பெற்றது. அடுத்து பெண்கள் பிரிவில் புதுமுறிப்பு சோலை அணியுடன் கிருஷ்ணபுர அணி களமிறங்கி கிருஷ்ணபுரம் அணி முதல் இடத்தை பெற்றது. அடுத்து உதைபந்தாட்ட போட்டி இடம் பெற்றது. புதுமுறிப்பு அணியை எதிர்த்து செல்வாநகர் அணி விளையாடி புதுமுறிப்பு அணி வெற்றி பெற்று அடுத்து வலைபந்து






போட்டி இடம் பெற்றது இதில் புதுமுறிப்பு அணியினை எதிர்த்து விநாயகபுரம் அணி விளையாடி வெற்றி பெற்றது.

இப்போட்டிகள் யாவும் நிறைவு பெற்றவுடன் இரவு மாலை நேர வகுப்பு மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றது முடிந்தவுடன் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டது.

## சமாதான நீதவானாகப் பொறுப்பேற்பு



18.06.2004 அன்று மன்னார் மாவட்ட தமிழீழ நீதிமன்று நீதியாளர் திரு.செ.மயூரன் முன்னிலையில் கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தலைவர் திரு. பொ. தங்கராசா சமாதான நீதவானாகப் பொறுப்பேற்று உறுதிப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

(சி-9869)


## காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லம்

## பணிநிலை வெற்றிடம்

பணிநிலை 01. மொழி பெயர்ப்பாளர்:-
ஆங்கிலம் ⟶ தமிழ் - 03
ஜேர்மனி ⟶ தமிழ் - 01

பணிநிலை 02. மின் ஒட்டுனர்:-
[வெல்டர்] - 01

பணிநிலை 03. மருத்துவ உதவியாளர்:- 02

பணிநிலை 04. சாரதி:- 02

பணிநிலை 05. தமிழ் ஆசிரியர்:- 01
[ஓய்வு பெற்றவர்களுக்கு முன்னுரிமை]

பணிநிலை 06. இலத்திரனியலாளர்கள்:- 05

பணிநிலை 07. கடலகவளவாளர்கள்:- 05


க.பொ.த.[சா/த] கல்வித்தகைமையும்
அதற்கு மேற்பட்ட கல்வித்தகைமையுடையோரும்

குறிப்பு:- நேர்முகத்தேர்வு 02.07.2004 (வெள்ளி) காலை 9.00
இடம்:- காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர்இல்லம்.
கைவேலி, புதுக்குடியிருப்பு.
தகைமைச்சான்றிதழ்களுடன் மேற்குறித்த நாளில் சமுகமளிக்கவும்

நிர்வாகச் செயலகம்,
காந்தரூபன் அறிவுச்சோலை.

(4755)


## காணவில்லை



### பாக்கியநாதர் றெஜினோல்ட்

பாக்கியநாதர் றெஜினோல்ட் ஆகிய இவரை அவரது பெற்றோர் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். இவரைக் கண்டு பிடித்துத் தருபவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புக்கு : T.P. 0777-222204

நேரில் :
பா. டொறின் (டீச்சர்)
பாலிநகர் மகாவித்தியாலயம்.
துணுக்காய்.

(4741)

# பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளின் மத்தியில் துருக்கியில் இன்று "நேட்டோ" மாநாடு

(இஸ்த்தான்புல்)

**எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் மீறி பலத்த பாதுகாப்பின் மத்தியில் துருக்கியில் இஸ்த்தான்புல் நகரில் நாற்பதிற்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்ளும் "நேட்டோ" மாநாடு இன்று ஆரம்பமாகின்றது.**

இந்த மாநாட்டில் ஈராக் ஆப்கானிஸ்தான் நாடுகளுக்கு கூடுதல் படைகளை அனுப்புவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றன.

வட அத்திலாந்திக் நாடுகளின் கூட்டமைப்பான "நேட்டோ" மாநாடு துருக்கியின் இஸ்த்தான்புல் நகரில் இன்று ஆரம்பமாகின்றது. இந் நிலையில் இந்த மாநாடு துருக்கியில் நடத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்வேறு வெடிகுண்டு தாக்குதல்களை எதிர்ப்பாளர்கள் நடத்தியுள்ளனர். தலைநகர் அங்காரா மற்றும் இஸ்த்தான்புல்லிலும் மாநாட்டிற்கு எதிர்ப்புத்தெரிவித்து போராட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

இதனால் பதற்றமான சூழ்நிலையில் இன்று தொடங்கவுள்ள மாநாட்டிற்கு விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை ஈராக்கில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இராணுவத்திற்கு "நேட்டோ" சார்பில் பயிற்சியளிப்பது, ஆப்கானிஸ்தானுக்கு கூடுதல் படைகள் அனுப்புவது உள்ளிட்ட முக்கிய தீர்மானங்கள் இன்றைய மாநாட்டில் நிறைவேற்றப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

துருக்கியில் நடைபெறவுள்ள "நேட்டோ" மாநாட்டின் பாதுகாப்பு மிக அதிகளவில் விரிவுபடுத்தப்படவுள்ளது. அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூபுஷ், பலத்த பாதுகாப்புடன் நேற்று அங்காரா வந்துசேர்ந்துள்ளார்.



செயற்கைக் கோள் காட்டும் நைலின் தோற்றம் நைல் நதியின் நீருடன் சம்பந்தப்பட்ட பல்வேறு திட்டங்களின் அடிப்படையில் எகிப்து, சூடான், எத்தியோப்பியா அமைச்சர்கள் உடன்பாட்டை எட்டியுள்ளனர்.

# மக்கள் போதைப்பொருளுக்கு அடிமை கென்ய அரசு கவலை தெரிவிப்பு

கென்யாவில் வறுமையின் பிடியில் சிக்கியுள்ள மக்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகும் அவலம் ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி குற்ற நடவடிக்கைகளிலும் மக்கள் ஈடுபடுவதாகக் கென்ய அரசு கவலை வெளியிட்டுள்ளது.

ஆபிரிக்க நாடான கென்யாவில் வறுமையின் பிடியில் சிக்கியுள்ள மக்கள் அவலநிலையை மறப்பதற்காகவே கூடுதலாகப் போதைப் பொருள் பழக்கத்தை நாடிவருகின்றனர்.

கென்ய நாட்டில் தொழில் வளங்கள், விவசாயவளங்கள் என்பன குறைவு இதனால் பெரும்பாலான மக்கள் வேலையில்லாமல் பிரச்சினைக்கு முகம்கொடுத்து வருகின்றார்கள்.

பட்டதாரிகள் தெருக்களில் காலணிதைக்கும் தொழிலிலும், பிற கூலித் தொழில்களிலுமே ஈடுபடுகின்ற அவலநிலை காணப்படுகின்றது.

இதனால் இவ்வாறான படித்த சமுதாயமே மன உளைச்சல் காரணமாகப் போதைப்பொருளை நாடுகின்றனர். இதனால் இளம் சந்ததியினர் சீர்குலைந்து போவதாக அரசு கவலை வெளியிட்டுள்ளது.

இதேவேளை கென்ய போதைப்பொருள் கடத்தலின் சொக்கபுரி என்று வர்ணிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. கென்யாவில் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களைத் திருத்தும் நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொண்டு வருகின்றது. இந்த நடவடிக்கை மூலம் குற்றச்செயல்களையும் தடுப்பதே தமது பிரதான நோக்கம் என்று அரசு கூறியுள்ளது.

# புஷ்ஷிற்கு நெருக்கடியை ஏற்படுத்திவரும் ஈராக்மீதான ஆக்கிரமிப்பு குறித்த திரைப்படம்

(பாக்தாத்)

ஈராக்கில் அமெரிக்கா மேற். கொண்ட ஆக்கிரமிப்பை கருப்பொருளாகக் கொண்ட திரைப்படம் ஒன்று அமெரிக்காவில் வெளியிடப்பட்டுள்ளது.

இத்திரைப்படம் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷிற்கு மிகுந்த நெருக்கடிகளை தோற்றுவித்துள்ள அதே வேளை நவம்பர் மாதம் நடைபெறவுள்ள தேர்தலில் பின்னடைவை ஏற்படுத்தும் என்றும் கூறப்படுகின்றது.

ஈராக் மீதான அமெரிக்காவின் தாக்குதல், அதன்பின்னர் ஈராக்கில் ஆதிக்கம் செலுத்திவரும் அமெரிக்கப் படையினர் சந்திக்கும் நாளாந்த துயரங்கள் என்பவற்றை கதையாக உள்ளடக்கி மைக்கில் மூன் என்பவர் குறும்படம் ஒன்றை தயாரித்து வெளியிட்டுள்ளார்.

இந்தக் குறும்படத்தில் உலக வர்த்தகமையம் மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலின் பின்னர் சனாதிபதி புஷ் மேற்கொண்ட தவறான நடவடிக்கைகளுக்கு அந்நாட்டு மக்கள் ஆதரவு அளிக்க வேண்டியிருந்த நிர்ப்பந்த சூழலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை நவம்பர் மாத சனாதிபதி தேர்தலில் புஷ் தோற்கடிக்கப்பட வேண்டும் என்றும் இந்தக் குறும்படத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# 2050 ஆம் ஆண்டு இந்திய,அமெரி. குழு செவ்வாயில் உறைவிடம் அமைக்கும்

## -இந்திய சனாதிபதி அப்துல்கலாம் தெரிவிப்பு


(வோஷிங்டன்)

இந்தியாவும், அமெரிக்காவும் ஒன்றிணைந்த செயற்கைக் கோளை 2009 ஆம் ஆண்டு விண்ணில் ஏவவுள்ளது.

இந்திய, அமெரிக்க விண்வெளி அறிவியல் மாநாட்டின் முடிவில் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமும் அமெரிக்க தேசிய கடல் மற்றும் காற்று மண்டல நிர்வாக அமைப்பும் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளன.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய இந்திய சனாதிபதி அப்துல் கலாம், இந்திய அமெரிக்க விஞ்ஞானிகளுக்கென்று ஐந்தம்ச விண்வெளித் திட்டத்திற்கு யோசனை கூறப்பட்டுள்ளது என்றார்.

அத்துடன் 2050 ஆம் ஆண்டிற்கும் இந்திய அமெரிக்கக் குழுவொன்று செவ்வாய்க் கிரகத்தில் உறைவிடம் அமைக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.



கணினி காட்டும் அமைக்கப்படவிருக்கும் கலிலியோ கடல்பயண முறைமையின் மூன்று செயற்கைக்கோள்களின் உருவம் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் இதுகுறித்து கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

# 2 கட்டங்களாக நடைபெறும் பாகிஸ்தான் பிரதமர் தெரிவு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் புதிய பிரதமர் நியமனம் குறித்த இரண்டு கட்டத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் ஜமருல்லாகான் ஜமாலி தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளதையடுத்தே இந்த புதிய திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய திட்டத்தில் முதல்கட்டம் ஆளும் பாகிஸ்தான் முஸ்லிம் கட்சித்தலைவர் சௌத்ரே சுயாத்குஷேன் பிரதமராகப் பதவியேற்கவுள்ளார். இவர் 45-50தினங்கள் பிரதமராகக் கடமையாற்றவுள்ளார்.

அதன்பின்னர் முன்னாள் அமைச்சரவையின் நிதியமைச்சராக இருந்த சௌகத் அஸிக் பாகிஸ்தான் தேசிய சட்டமன்றத்திற்கு தேர்வுசெய்யப்பட்ட பின்னர் பிரதமர் பதவியேற்பது இரண்டாவது கட்டமாகும்.

இந்த இரண்டுகட்ட, இரண்டு பிரதமர் திட்டத்தை முன்னாள் அமைச்சரவையின் தகவல்துறை அமைச்சர் ஷேக்ரஸிக் அகமத் நேற்று முன்தினம் இஸ்லாமாபாத்தில் அறிவித்துள்ளார்.

இந்த புதிய திட்டத்திற்கு சனாதிபதி முஷராப் ஆதரவளித்துள்ளார் என்றும், இடைக்காலப் பிரதமராக சௌத்ரே சுயாீத்குஷேன் இன்று பதவியேற்பார் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனையடுத்து தேசிய சட்டமன்றத்தில் இவர் தனது பெரும்பான்மையை நிரூபிப்பார் என்றும் கூறப்படுகின்றது.

# பரஸ்பரம் நம்பிக்கையை மேம்படுத்தும் நடவடிக்கை குறித்து இந்.பாக் அதிகாரிகள் பேச்சு

(இஸ்லாமாபாத்)

இந்திய பாகிஸ்தானிடையே வெளியுறவு மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் மீண்டும் நேற்று புதுடில்லியில் ஆரம்பமாகியுள்ளன.

காஷ்மீர் பிரச்சினை இரு நாடுகளிடையே நட்புறவு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவது, பரஸ்பரம் நம்பிக்கையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது போன்ற பல்வேறு விடயங்கள் இந்தப்பேச்சு வார்த்தையில் விவாதிக்கப்பட்டுள்ளன என்று இந்தியத்தரப்பு அறிவித்துள்ளது. காஷ்மீர் பிரச்சினைக்கு சிம்லா உடன்படிக்கையின் படி தீர்வு காணப்பட வேண்டும். இதில் மூன்றாவது நாட்டின் தலையீட்டை அனுமதிக்க முடியாது என்ற நிலையில் உறுதியுடன் இருக்கும் இந்தியா தொடரும் பேச்சுக்களின் போதே இதனை வலியுறுத்தவும் உள்ளது.

இதேவேளை எல்லைகளில் படைகளைக்குறைப்பது, காஷ்மீர் பேச்சுவார்த்தையின் போது அம்மாநிலத்தலைவர்களைப் பங்கு கொள்ளவைப்பது ஆகிய விடயங்களை பாகிஸ்தான் வலியுறுத்தவுள்ளது என்று இந்தியா எதிர்பார்க்கின்றது.

இந்தப்பேச்சுவார்த்தையில் இந்தியத்தரப்பில் வெளியுறவுச் செயலர் ஷெஷான், புதிய வெளியுறவுச் செயலக பதவிஏற்க இருக்கும் ஷெயான் சரண் பாகிஸ்தான் இந்தியத்தூதர் சிலிங்கமோகன் ஆகியோர் அடங்கிய குழு பங்கு கொள்கின்றது.

பாகிஸ்தான் தரப்பில் அந்நாட்டின் வெளியுறவுச் செயலர் றியாத் றொக்கர், இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதுவர் அதி அகமட்கான் மற்றும் உயரதிகாரிகள் குழு கலந்து கொண்டுள்ளது.

இதேவேளை நேற்றுமுன்தினம் இந்தியா வந்துள்ள பாகிஸ்தான் குழுவின் தலைவர் றியாத் றொக்கர் இந்தப் பேச்சுக்களை ஆக்கபூர்வமாக அணுகிப் போவதாகக் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நாடுகளுக்கிடையிலான பிணக்குகளிலும், காஷ்மீர் விவகாரத்திலும் வெளிநாடுகளின் தலையீடுகளைக் கட்டுப்படுத்தும் ஒரு முயற்சியாகவும் இந்த இரு நாடுகளுக்கிடையிலும் இராஜதந்திரிகள் மட்டத்திலும் அதிகாரிகள் மட்டத்திலும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்று வருவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.



அசாம் மாநிலத்தின் தலைநகர் குீவாகரியின் தென்கிழக்கில் 70கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள பொரோமாவில் வெள்ளத்தில் மூழ்கியுள்ள தனது வீட்டிலிருந்து தன் மகளைப் பாதுகாப்பாகத் தூக்கிச்செல்லும் தந்தை.

# யுனிசெவ் நிதியுதவியுடன் இவ்வாண்டில்

# நான்கு வைத்தியசாலைகளில் புனரமைப்பு

## மேலும் திட்டங்களை செயற்படுத்த ஏற்பாடு

**யுனிசெவ் அமைப்பு இவ்வாண்டில் நான்கு வைத்தியசாலைகளில் புனரமைப்புப் பணிகளுக்கு உதவ முன்வந்துள்ளது. இந்தப்பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளி. மாவட்ட மாகாண சுகாதார சேவைப்பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.**

பளை வைத்தியசாலை சிறுவர் விடுதி புதுப்பித்தல். -13,29,129 ரூபாவிலும், மற்றும் வேரவில் மகப்பேற்றுமனை புதுப்பித்தல் -12,49,814., தர்மபுரம் வைத்தியசாலை புதுப்பித்தல்.-5,83,561., வட்டக்கச்சி வைத்தியசாலை புதுப்பித்தல்.-5,22,670. ரூபாய்களிலும் புனரமைக்கப்படவுள்ளன.இவ்வேலைகள் அடுத்த மாதமளவில் ஆரம்பிக்க இருக்கிறது.

அதேவேளையில் தொண்டர்களாகப் பலவருடங்களாகக் கடமையாற்றுபவர்களுக்கு பலவருடங்களாக ஊக்குவிப்புக் கொடுப்பனவை யுனிசெவ் நிறுவனம் வழங்கி வருகின்றது. அந்தக் கொடுப்பனவு இவ்வருடமும்தொடர்வதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர தொண்டர்களாக இருப்பவர்கள் வேறு தொழில்களை எதிர்காலத்தில் தேடிக்கொள்வதற்கு வசதியாக க.பொ.த(சா/த) பரீட்சையில் தேவையான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு தொண்டர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு அந்தந்த வைத்திய நிலையங்களில் மேலதிக வகுப்புக்கள் நடாத்த யுனிசெவ் நிறுவனம் உதவி வருகின்றது. இவ் வகுப்புக்கள் 09 நிலையங்களில் நடைபெற்று வருகின்றது.

சென்ற வருட நிதியில் இருந்து கட்டப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் 03 முற்றாகப் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. மிகுதி 07ஆம் மாதம் அல்லது அடுத்தமாதம் முடிவுற்று பொதுமக்களிடம் கையளிக்கப்பட இருக்கின்றன.

மேலும் யுனிசெவ் நிறுவனத்தின் நிதி உதவியுடன் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் அதி தீவிர சிகிச்சைப்பிரிவு ஒன்று கட்டப்பட்டு முடிவுறும் தறுவாயில் உள்ளது. அதுவும் அடுத்தமாதமளவில் செயற்பட ஆரம்பிக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அழகியல் கலாமன்ற ஒன்று கூடல் பிற்போடல்

கிளிநொச்சி கல்விவலயத்தில் அழகியல் கலாமன்றத்தில் 29.06.2004 இல் ஒன்று கூட ஒழுங்கு செய்யப்பட்ட சங்கீத, நடன ஆசிரியர்களது கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் 01.07.2004 வியாழக்கிழமை அதே நேரத்தில் நடைபெறும்.



கரும்புலிகளின் நினைவு நாளை முன்னிட்டு நேற்று முன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் மதியம் வரையும் துணுக்காய் பிரதேச அரசியல்துறையினரின் ஏற்பாட்டில் ஆலங்குளம் மேஜர் அதிரதன் முன்பள்ளி வளாகம் ஆலங்குளம் மக்களினால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. சிரமதானப் பணியின்போது போராளிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். (படம் -அன்ரனி)

# மணல் ஏற்றியோருக்கு குற்றப் பணம் அறவீடு

(அலுவலக செய்தியாளர்)

மணல் ஏற்ற தடைவிதிக்கப்பெற்றஇரணைமடு கோரமோட்டைப் பகுதியில் மண் ஏற்றிய உழவு இயந்திர உரிமையாளர்களுக்கு கரைச்சிப் பிரதேச சபையினர் குற்றப்பணம் அறவிட்டுள்ளனர்.

கடந்த வெள்ளியன்று மேற்படி பகுதியில் மணல் ஏற்றிய ஏழு உழவு இயந்திர உரிமையாளர்களுக்கு தலா 5000 ரூபா வீதம் குற்றப்பணம் அறவிடப்பட்டுள்ளதெனவும் குற்றப்பணம் செலுத்தத் தவறிய உழவு இயந்திரங்கள் காவல் பணிமனையில் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (சோ)

# வரட்சியால் பாதிப்புற்ற விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்க அரச அதிபர் ஏற்பாடு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட கடும் வரட்சி காரணமாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்க மன்னார் அரச அதிபர் ஏற்பாடு செய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தமது நிலங்களைக் காப்புறுதி செய்துள்ள விவசாயிகளுக்கே இவ்வாறு நட்டஈட்டுக் கொடுப்பனவு வழங்க அரச அதிபர் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார்.

இதன்படி ஏக்கர் ஒன்றுக்கு ரூபா ஆறாயிரம் வழங்கப்படும் என்றும் இதனால் 2814 விவசாயிகள் அம்மாவட்டத்தில் நன்மையடையவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மி)

# ஒப்பந்தக்காரரின் செயற்திறனை மேம்படுத்த ஆலோசனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஒப்பந்தக்காரரின் செயற்திறனை அதிகரிப்பது தொடர்பாகவும் அவர்களுக்குள்ள நெருக்கடிக்குள் பற்றாக்குறைகள் பற்றிய ஆலோசனைக்கூட்டம் ஒன்று கடந்த வெள்ளியன்று தமிழீழ நிர்வாகசேவையின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வடக்கு- கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திட்டக்குழுவின் தலைவர் லென்ஜென்கீன்ஸ் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஒப்பந்தக்காரர்களுக்குள்ள நெருக்கடிகள் குறித்து கேட்டறிந்தார்.

ஒப்பந்தக்காரர் தமக்குள்ள நிதிப்பிரச்சினை குறித்தும் தேவைப்படும் பயிற்சிகள் குறித்தும்விடுத்த வேண்டு கோள்களுக்கு விரைவில் பதில் தரப்படும் என்றும் லென் ஜென்கீன்ஸ் பதிலளித்தார்.

## வங்கிக்கிளை திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிராமிய அபிவிருத்தி வங்கி முள்ளியவளைப் பிரதேசக்கிளை திறப்புவிழா நிகழ்வு எதிர்வரும் 02.07.2004 அன்று பகல் 11.00 மணிக்கு முள்ளியவளையில் இடம்பெறவுள்ளது.

முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் கிராமிய அபிவிருத்தி வங்கி முள்ளியவளை பிரதேசக்கிளை திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப விவசாயிகள் அர்ப்பணிப்புடன் செயற்படுக!

## த.பொ.மே.நிறுவனப் பொறுப்பாளர் அழைப்பு

கமக்கார அமைப்புகளுக்கும் விவசாயிகளுக்குமான ஒன்று கூடல் வவுனியா மாவட்டத்தில் நடைபெற்றது. கடந்த 24 ஆம் திகதி காலை 10.00மணியளவில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வவுனியா மாவட்டப் பொறுப்பாளர் இ. மாறன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அபிவிருத்தி சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது.

இதில் சிறப்புப் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் சிறப்புரையாற்றுகையில் “கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அனைத்து விவசாயிகளும் தம்மை முழு அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்த வேண்டும்'' எனக் கேட்டுக்கொண்டார்.

மேற்படி கலந்துரையாடலில் பயிர்ச்செய்கை நீர்முகாமைத்துவம் பற்றியும் ஆராயப்பட்டது

நன்றியுரையினை வவுனியா மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் ரி.முரளி வழங்கினார் இக் கலந்துரையாடலில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு துணைப்பொறுப்பாளர் மதன்ராஜ், பிரதேச இணைப்பாளர்கள் தலைமைப்பீடப் பெரும்பாக உத்தியோகத்தர்,கால்நடைப் போதனாசிரியர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.(05)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்

## ஜூலை – 6 ஆம் திகதி கல்வியமைச்சில் ஆராய்வு

சிறிலங்கா கல்வி உயர் கல்வி அமைச்சிற்கும், வடக்குக் கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கத் தூதுக் குழுவினருக்கும் இடையேயான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

கொழும்பு இசுறுபாயவில் அமைந்துள்ள கல்வி அமைச்சு பணிமனையில் கடந்த 24 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் குறித்து எதிர்வரும் 6 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள கல்வியமைச்சின் மாநாட்டில் ஆராயப்படவுள்ளதாக கல்வியமைச்சு இக்கூட்டத்தில் கூறியுள்ளது.

வடக்குக் கிழக்கு பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் குறித்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கல்வியமைச்சு கூறியுள்ளது. இதே வேளை வடக்குக் கிழக்கில் நிலவும் மிகமோசமான ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை பற்றி பகுதி நேர ஆங்கில ஆசிரியர் தூதுக்குழுவினர் கல்வியமைச்சிற்கு எடுத்துக் கூறியுள்ளதுடன் அது தொடர்பான மனுவொன்றையும் கையளித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறிலங்கா கல்வி உயர்கல்வி அமைச்சு விடுத்த வேண்டுகோளை அடுத்து வடக்குக் கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்க தூதுக்குழுவினர் கடந்த 24-06-2004 கொழும்பு இசுறுபாயவில் அமைந்துள்ள கல்வியமைச்சுப் பணிமனையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்குபற்றினர். கல்வியமைச்சு நிர்வாகச் செயலாளர் G.B.H லியனகே, கல்வியமைச்சு முதன்மை உதவிச்செயலாளர் P.B. ஜயவர்த்தன, முகாமைத்துவ நிர்வாக உத்தியோகத்தர் K.A.L.L. விஜயரட்ண ஆகியோர் நடத்திய இக்கலந்துரையாடலில் எமது சங்கம் சார்பில் தலைவர். சி.ஞானகரன், செயலாளர் எம். அருந்தவக்குமார் உட்பட மூவினங்களையும் சேர்ந்த பத்துப்பேர் பங்குபற்றினர். பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் தொடர்பாக வரும் ஆறாம் திகதி ஜூலை மாதம் கொழும்பில் முக்கிய மாநாடு ஒன்று நடைபெறவிருப்பதாகவும் கல்வியமைச்சின் சங்கத் தூதுக் குழுவினிடம் எடுத்துவிளக்கப்பட்டது.

வெகுவிரைவில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும், அக்கூட்டத்தில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது. ஒரு மணிநேரம் வரை இக்கலந்துரையாடல் இடம்பெற்றது. வடக்கு-கிழக்கில் நிலவும் மிகமோசமான ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை பற்றி எமது சங்கத்தினர் தரவு ரீதியாக எடுத்துக் கூறியதுடன் மனு ஒன்றையும் கையளித்தனர் என வட-கிழக்கு மாகாண பிரதேச ஆங்கில ஆசிரியர் சங்கம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது..

# விளக்க மறியல் நீடிப்பு

அக்கரைப்பற்று விசேட அதிரடிப்படையினரால் கடந்த 19ஆம் திகதி ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்த கருணா குழுவைச்சேர்ந்த பேரின்பம் ஜெயக்குமார், வந்தாறு மூலை, சரவணமுத்து சாந்தகுமார், தாண்டியடி ஆகிய இருவரும் கடந்த 18.06.2004 அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் ரி.எல்.ஏ.மானாப் உத்தரவிட்டுள்ளார். இருவரிடமிருந்தும் பிஸ்ரல் ஒன்றும் கைக்குண்டு ஒன்றும், மற்றும் இருபது ரவைகள் என்பனவும் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களில் ஒருவரான தாண்டியடியைச் சேர்ந்த சரவணமுத்து சாந்தகுமார் திறந்த நீதிமன்றில் விடுத்த கோரிக்கையை அடுத்து அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கையடக்கத் தொலைபேசி, உடுப்புக்கள், 1700ரூபா பணம் என்பவற்றிலிருந்து உடுப்புக்கள், மட்டும் நீதவானின் உத்தரவின் பேரில் மீளக் கையளிக்கப்பட்டுள்ளது. (32)

# பருத்தித்துறையில் நவீன சந்தைக் கட்டடம் 370 மில்.ரூபா செலவில் நிர்மானிக்க நடவடிக்கை

(பருத்தித்துறை)

**பருத்தித்துறை நகரில் 370 மில்லியன் ரூபா செலவில் நவீன சந்தைக்கட்டடம் ஒன்றை நிர்மா ணிக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.**

மேற்படி நவீன சந்தைக் கட்டத்தை நிர்மானிப்பதற்கு தேவையான 370 மில்லியன் ரூபாவில்150 மில்லியன் ரூபாவை நிக்கோட் அமைப்பு வழங்க முன் வந்துள்ளது.

ஏற்கனவே பருத்தித்துறை நகரில் அமைக்கப்பட்டிருந்த நவீன சந்தைக்கட்டடம் சிறிலங்காப் படையினரின் ஒப்பிரேசன் லிபிரேசன் இராணுவ நடவடிக்கை மூலம் சேதமாக்கப்பட்டிருப்பதால் பருத்தித்துறை நகர அபிவிருத்தியில் ஏற்பட்டிருந்த பாதிப்புக்களை அப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்தே நவீன சந்தைக்கட்டடம் ஒன்றை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (33)

## -குறுக்கே பாய்ந்த பன்றியில் மோதி-

# உந்துருளியில் சென்றுகொண்டிருந்த கணவன்,மனைவி படுகாயம்

சரசாலை பிரதான வீதியில் உந்துருளியில் சென்று கொண்டிருந்த இருவர் திடீர் என பன்றி வீதிக்குக் குறுக்கே பாய்ந்ததால் அதில் மோதி வீழ்ந்து படுகாயமடைந்தனர். உந்துருளியில் சென்று கொண்டிருந்த கணவன், மனைவி இருவரும் படுகாயமடைந்துள்ள நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (28)

# குடிநீர் விநியோக நேரத்தை அதிகரிக்க நாவாந்துறை மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். நாவாந்துறை வடக்குப் பிரதேச வாழ்மக்கள் தமக்கான குடிநீர் விநியோக நேரத்தை அதிகரிப்புச் செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி பிரதேசத்தில் நில விவரும் குடிநீருக்கான தட்டுப்பாட்டு நிலைமையைக் கவனத்தில் கொண்டு யாழ் மாநகரசபை இப் பிரதேச வாழ் மக்களுக்கான குடிநீரினை குழாய்கள் மூலமாக விநியோகித்து வருகின்றது.

இவ்வாறு மாநகரசபையால் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் காலை வேளையில் ஒருமணி நேரமும் மாலை வேளையில் ஒரு மணிநேரமும் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது.

இதனால் இப்பிரதேச வாழ் மக்கள் தமது அன்றாடத் தேவைகளுக்கான குடிநீரினைத் திருப்திகரமான முறையில் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியே மேற்படி பிரதேச மக்கள் தமக்குக் குழாய்மூலமாக நீர் விநியோகம் செய்யப்படும் நேர அளவை அதிகரிப்புச் செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கும் கொண்டுவந்துள்ளனர்.(33)

# ஐயனார் ஆலய நிதி உதவியில் காரைநகர் வைத்தியசாலை புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தின் நிதி உதவியுடன் காரைநகர் வைத்தியசாலையில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் சேதமுற்றுப் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படும் மேற்படி வைத்திய சாலையின் தேவைப்பாடுகளைக் கருத்தில் கொண்டே மேற்படி ஆலய நிர்வாகத்தினரால் இது புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

அந்தவகையில் காரைநகர் வைத்தியசாலையின் ஆண் ,பெண் வைத்திய விடுதிகள் வியாவில் ஐயனார் ஆலயத்தின் 15 ஆயிரம் ரூபா நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. (33)

# "கலோரஸ்" தூக்கப்பட்டது தொடர்பாக 10 முன்னாள் ஊழியர் பொலிசாரால் கைது

## -விசாரணையின் பின் சிலர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் வெடி பொருட்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் கலோரஸ் படையணியினரது முகாம் தீயிடப்பட்டமை தொடர்பாக 10 இற்கும் மேற்பட்டோர் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

முன்னர் "கலோரஸ்" படையணியில் இருந்து கடமையாற்றிப் பின் அதிலிருந்து விலகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டோரில் சிலர் விசாரணைகளின் பின் விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை "கலோரஸ்" நிறுவன அதிகாரிகளுக்குத் தொடர்ந்தும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (33)

## -யாழ். மாவட்டத்திலுள்ள

# 150 குளங்களைப் புனரமைக்க "நொராட்" நிறுவனம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாட்டில் உள்ள 150 குளங்களைப் புனரமைப்புச் செய்வதன் மூலம் அக்குளங்கள் உள்ள பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவ "நொராட்" நிறுவனம் முன் வந்துள்ளது.யாழ்.குடாநாட்டில்உள்ள பின்தங்கியகிராமங்களின் விவசாய, கால்நடை, மற்றும் சுயதொழில் முயற்சி ஆகியவற்றினை மேம்படுத்தும் நோக்குடனேயே இவ் புனரமைப்புப் பணியை மேற்கொள்ள "நொராட்" அமைப்பு முன் வந்துள்ளது.இதற்காக பல மில்லியன் ரூபாக்களை இந் நிறுவனம் ஒதுக்கியிருப்பதாகத் தெரியவருகிறது. (33)

# சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியில் சங்கானையில்32 மலசல கூடங்கள்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின்நிதியுதவியில் சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் அடிப்படைச் சுகாதார வசதிகள் அற்று வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு மலசலகூட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்புக்களாலும், இடம்பெயர்வுகளாலும் பாதிக்கக்கப்பட்ட மேற்படி பிரதேச மக்களின் சுகாதார நிலைமைகளை கவனத்தில் கொண்டே இம்மலசலக்கூட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் மேற்படி பிரதேச செயலர் பிரிவில் உள்ள 9கிராம சேவுகர் பிரிவுகளில் வாழ்ந்துவரும் 32 குடும்பங் களுக்கு ஒவ்வொன்றும் தலா 15ஆயிரம்ரூபா பெறுமதியான 32 மலசலகூடம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. (33)

# தெல்லிப்பளை புற்று நோய் வைத்தியசாலையை மக்கள் பாவனைக்கு விடும் முயற்சியில் சுகாதாரசேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். தெல்லிப்பளைப் பிரதேசத்தில் உள்ள இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயத்தினால் உள்வாங்கப்பட்டிருக்கும் தெல்லிப்பளைப் புற்றுநோய் வைத்திய சாலையை எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் மக்கள் பாவனைக்கு விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் சேதமாக்கப்பட்டு தளபாட வசதிகள் அற்ற நிலையில் காணப்படும் மேற்படி வைத்திய சாலையினை மீளமைப்புச் செய்து மக்கள் பாவனைக்கு விடுவதற்கான நடவடிக்கைகளை மாகாண சுகாதார சேவைப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் சிறந்ததொரு புற்றுநோய் வைத்திய சாலை இல்லாததால் யாழ். குடாநாட்டில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டோர் எதிர் கொண்டு வரும் அசௌகரியங்களைக் கவனத்தில் கொண்டே மாகாண சுகாதார சேவைகள் பிரிவினால் இதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (33)

# கண்காட்சிப் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி பிரதேச முன்பள்ளிகளுக்கிடையிலான கண் காட் சிப் போட் டியின் ஆரம்பநாள் நிகழ்வு நேற்று முன் தினம்நெல்லியடி மகாவித்தியாலயத்தில் இடம் பெற்றுள்ளது.

வடமராட்சி முன்பள்ளி பிரதிக்கல்விப் பணிப்பாளர் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை மாவீரன் வைத்தியின் சகோதரனாரும், தமிழீழத்தேசியக் கொடியினை வடமராட்சி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தயாவும் ஏற்றிவைத்தனர். இதனைத் தொடர்ந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் கண்காட்சியை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

முன்பள்ளிச்சிறார்கள், முன்பள்ளிஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவன அதிகாரிகள், போராளிகள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (33)

# பெரியவிளானில் மீளக்குடியேறும் மக்களுக்கு உதவுமாறு கோரிக்கை

யாழ். பெரியவிளான் கிராம வாழ் மக்கள் அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் மேற்படி பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் தற்பொழுது அப்பகுதிகளில் மீளக் குடியமரத் தொடங்கியுள்ளனர்.

எனினும் இவ்வாறு மீளக் குடியமர்ந்து வரும்மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியளவில் இங்கு வசதி வாய்ப்புக்கள் காணப்படவில்லை.

குறிப்பாக இங்கு வாழ்விட வசதி இன்மைகள் சுகாதார வசதி இன்மை,கல்வி மேம்பாட்டு வசதி இன்மை, மருத்துவ வசதி இன்மை, தொழில் வாய்ப்பு இன்மை என்பன காணப்படுகின்றன.

இவற்றால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு உதவிகளை வழங்க முன்வருமாறு கோரிக்கை விடுத்துள்ள அப்பகுதி பிரதேசசபை செயலாளர் பி.விக்ரர் இது தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் உட்பட பல தரப்பினர்க்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார். (33)

# பேருந்து சேவையை நடத்துக அனலை தீவு மக்கள் கோரிக்கை

யாழ்.தீவகத்தில் உள்ள அனலைதீவு மேற்குக்கடற்கரை வீதியை புனரமைத்து அவ்வீதியூடாக பேருந்துச் சேவை ஒன்றையும் நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலயுத்தத்தின் போது சேதமாக்கப்பட்ட மேற்படிவீதி புனரமைக்கப்படாத நிலையிலேயே காணப்படுவதால் இவ் வீதி ஊடானபேருந்துச் சேவையை நடத்தமுடியாத சூழ்நிலை காணப்படுகிறது.

இதனால் இப்பகுதி மக்கள் தமது போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பல இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனைக் கருத்திற் கொண்டே மேற்படி வீதியை புனரமைத்து பேருந்துபோக்குவரத்து சேவையை நடத்த உதவுமாறு [illegible]கள் கோரிக்கை [illegible]த்துள[illegible] (33)

# இலங்கை வங்கி கிளை திறப்பு

இலங்கை வங்கி திருநெல்வேலி கிளையினுடைய தன்னியக்க பரிவர்த்தன நிலையம் இன்று காலை 9.30 மணியளவில் பிரதி பொது முகாமையாளர் திரு.V.A.C.பெர்னாண்டோவினால் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

இத்தன்னியக்க பரிவர்த்தன நிலையத்திறப்பு விழாவின் போது பாராளுமன்ற உறுப்பினரும் முன்னைநாள் யாழ்பல்கலைக்கழகத்தின மாணவர் ஒன்றிய தலைவருமான திரு.கஜேந்திரன், திரு.மோகனதாஸ் (துணைவேந்தர் யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# டெங்கு நோயை ஒழிக்க மன்னாரில் மாபெரும் கூட்டம்

(மன்னார்)

மன்னாரில் டெங்கு நோய் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தால் நேற்று முன்தினம் மாபெரும் கூட்டம் நடைபெற்றது.

இதில் பாடசாலை மாணவ மாணவிகள், ஆசிரியர்கள், சுகாதார ஊழியர்கள், பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர் டெங்கு நோய்த் தடுப்பு தொடர்பாக டெங்கு நோயை ஒழிப்போம் என்று கோசமிட்டு மாணவ, மாணவிகளும், ஆசிரியர்களும், பொது மக்கள் அனைவரும் மன்னார் நகரை வலம் வந்தனர்.

ஏறக்குறைய 500 இற்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் இதில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (மி)

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து சென்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி என்ற ஒன்றை உருவாக்கியமை தனது அறிவற்ற செயல் என எஸ்.டபிள்யு ஆர்.டி. பண்டாரநாயக்க ஒரு காலத்தில் நினைத்திருப்பார். அந்த ஞானம் பிறக்கக் காரணம் 1952இல் சிறில. சுதந்திரக்கட்சியடைந்த படுதோல்வியேயாகும். இக்காலப் பகுதியில் பண்டாரநாயக்காக்களின் சரித்திரம் முடிவுபெற்றுவிட்டதாக ஐ.தே.க. மனப்பால் குடித்திருக்கலாம்.

ஐக்கிய தேசிய பிக்குகள் முன்னணி தலையெடுக்கத் தொடங்கியது. இக்காலப் பகுதியிலேயே. "பௌத்த சங்கமும், பாஞ்சாலைகளின் புரட்சியும்" என்ற நூலின் மூலம் இப்பிக்குமார் முன்னணி நாடு அடங்கிலும் சிங்கள பௌத்த அலையைத் . தோற்றுவித்தது. அதன் பின்பு 1955 காலப் பகுதி பண்டாரநாயக்க ஒருவரை ஆட்சி பீடம் அமர்த்தியது அந்த வகையிலேயே.

அது மட்டுமன்றி 1959ஆம் ஆண்டு பண்டாரநாயக்க கொலையுண்ட பின்னர் கட்சி வெறுப்புக்குள்ளான வேளையிலும் பிக்கு ஒருவரே மீண்டும் பண்டாரநாயக்க தலைமையில் ஆட்சியமைக்க உதவினார். அவர் ஹேன்பிட்ட கெதர ஞானசீக ஹிமிபான ஆவார்.

அவர் அது தொடர்பாக பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

"பிரதமர் பண்டாரநாயக்கவின் மறைவின் பின்பு சிறிமா கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்க மறுத்துள்ளார். அதனால், கட்சி பிளவுபடும் என நான் எண்ணுகிறேன். அப்படி எண்ணத் தோன்றியது எனக்குக் கிடைத்த தொலைபேசிச் செய்தி மூலமே அச்செய் 1952 வரை கட்சிக்காகச் செலவிட்டதும், பாடுபட்டதும் இத்தோடு முடிவுக்கு வருவதா? அப்படி முடியாது என்று நான் கூறினேன். அதற்கும் சிறிமா மௌனமாக இருந்தார். நான் திரும்பத் திரும்ப வலியுறுத்தினேன். அதன் பின்னர் அவர், மலல சேகரவைக் கேட்டுப் பாருங்கள் என்றார். நான் உடனேயே அவரிடம் சென்றேன். அவரிடம் முழு விபரமும் கூறினேன். ஆனால், அவரும் தான் அரசியல்வாதியல்ல. அதனால் என்னால் முடியாத ஒன்றைக் கேட்க வேண்டாம். (பௌத்த) சமயம் தொடர்பாக எதாவது உதவி செய்கிறேன் என்று கூறினார் என்று கூறும் கடிதம்,

பின்னர் அப்பிக்கு சிறிமாவிடம் வந்து மலலசேகர மறுத்ததைத் தெரிவித்து ஆர்.ஜி.சேனநாயக்கவிடம் கேட்போம் என்றும், ஆனால் அதற்கு முன்பு சி.பி.டி.சில்வாவைச் பௌத்த பிக்குவான தம்பராவே ரதன தேரர் என்பவராலேயே 1965-1970 காலப் பகுதியில் ஏற்படுத்தப்பட்ட டட்லி-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்தவர்களும் பிக்குமார்களே இடது சாரிகளையும் இணைத்து நடத்தப்பட்ட அவ்வெதிர்ப்புப் பேரணியில் தம்பராவே ரத்ன தேரர் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டில் பலியானார். அச்சம்பவத்தை ஒரு துரும்பாகக் கொண்டு இடது சாரிகளுடன் சேர்ந்து நாடு முழுவதும் ஐ.தே.கவுக்கு எதிராக சிறிமா பிரச்சாரம் செய்தார். வாக்குகளைக் கேட்டார். அதற்கேற்ப மக்களும் 1970 ஆம் ஆண்டு சிறிமாவுக்கு அள்ளி வழங்கினர்.

பிக்குகளினால் மீண்டும் பண்டாரநாயக்க பரம்பரையில் ஒருவர் பிரதமரானார் .உண்மையில் அந்த வெற்றி பிக்குகள் முன்னணியையே சேரும். பௌத்த மதத்தை ஆதரித்தமை அவ்வாறே. ஆனால் இன்று? பிரச்சினை அங்குதான். அன்று பிக்குகள் எஸ். டபிள்யு ஆர்.டி பண்டாரநாயக்காவையும், சுதந்திரக் கட்சியையும் தோளில் வைத்துக் கொண்டு 56 ஆம் ஆண்டு புரட்சியை ஏற்படுத்தி, எதிரியை வெல்லப்புறப்பட்டனர். இன்று பாராளுமன்றத்தில் பிக்குகளை வெல்ல அல்லது அழிக்க அதே சிறிலங்கா சுதந்திரக்கட்சி போர்க்கொடி தூக்கி நிற்கின்றது.

அன்று வெள்ளையர்களுக்கெதிராக புரட்சி செய்து வெற்றி பெறவைத்த பிக்குகளுக்கு நாட்டில் நன்மதிப்புக் கிடையாது. கண்டி நிர்வாகம் தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட வெள்ளையர் திரண்ட போது வெள்ளையரின் கொடியை இறக்கி விட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட மறுத்தார் வாரியபொல சிறி சுமங்கல தேரர். ஆயினும் அப்போது ஆயுதம் ஏந்

# "பிக்குகள் முன்னணியிலிருந்து ஹெல உறுமய வரை"





தியை அறிவித்தவர் முன்னாள் பிரதமர் ஒருவரே. அச்செய்தியில் குறிப்பிட்டிருந்ததானது, சிறிமா தலைமைத்துவத்தை ஏற்க மறுப்பதால் நாங்கள் பெட்டி படுக்கைகளுடன் வீடு செல்கிறோம் உங்களால் ஏதும் முடிந்தால் செய்யுங்கள்" என்றிருந்தது.

அச்செய்தியறிந்தவுடன் நான் நேராக சிறிமாவோவை சந்திக்கச் சென்றேன் என்று குறிப்பிடும் மேற்படி பிக்குவின் கடிதம் மேலும், கூறுவதாவது, நான் சிறிமாவோவின் வீட்டுக்குச் சென்றபோது என்னை வரவேற்ற சிறிமாவோ மிகவும் கவலைதோய்ந்த முகத்துடன் காணப்பட்டார். ஆசனத்தில் கூட அவர் அமராது நிலத்தைப் பார்த்தவாறு மௌனமாக நின்றார்.

அப்போது நான் கேட்டேன். பதவியை ஏற்க மறுப்பதாகக் கூறியது உண்மைதானா என்று அதற்கு அவர் உண்மைதான் என்று கூறியதுடன், அரசியலுக்குச் சென்று (கணவரான) பிரதமர் கொலையுண்டார் எனக்கும் அதுவே நடக்கும். ஆகையால் எனக்கு அரசியல் வேண்டாம். நான் எனது பிள்ளைகளுடன் ஒதுங்கியிருக்கப் போகிறேன் என்று கூறினார். அப்படியென்றால், கட்சிக்கு யாரை தலைவராகத் தெரிவு செய்யலாம் என்பதைக் கூறுங்கள் என்றும், 1950- சந்தித்துக் கருத்தை அறிய வேண்டும் என்றும் முடிவெடுத்து அவர் விரும்பினால் ஆர்.ஜி.சேனநாயக்கவிடம் செல்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

அதன் பின்னர் மேற்படி பிக்குவான ஞானசீக தேரர் விடைபெற எழுந்தபோது சிறிமா எட்டி நின்றதால் கையை நீட்டி ரகசியம் ஒன்று சொல்ல நினைத்தபோது அவர் ஓடி ஒழித்துவிட்டதாகவும் ஏன் ஓடிவந்தீர்கள் எனக் கேட்டதற்கு உங்களின் நிலையைப் பார்த்த போது நான் தாக்கப்படுவேனோ என்ற அச்சத்தில் ஓடிவந்ததாகவும் சிறிமா தெரிவித்தாகக் கடிதம் கூறுகிறது.

பெண்ணொருவரைத் தாக்கும் தர்மத்தைப் போதிக்கும் தம்மிடம் கிடையாது எனக் கூறிய பிக்கு பின்னர் ஒரு வழியாக அம்மையாரை சமாதானப்படுத்தி இவ்வளவு காலமும் கட்சியை வளர்க்க எடுத்த முயற்சி பற்றியும் அதனைப் பேணுவதன் அவசியம் பற்றியும், விளக்கி தலைமைத்துவத்தை மட்டும் ஏற்குமாறும் மிகுதி வேலைகளை தான் கவனிப்பதாகவும் தெரிவித்து சிறிமாவோவை தலைவியாக்கியதை (கடிதம்) எழுத்து மூலம் பதிவு செய்துள்ளார்.

அவர் இல்லாதிருந்தால் பண்டாரநாயக்க பரம்பரையில் ஒருவர் ஆட்சிபீடம் ஏறியிருக்க மாட்டார்.

அத்துடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்று ஒன்றும் இல்லாமல் போயிருக்கும். அவரால் பதவிக்கு வந்த அக்கட்சி 1965 ஆம் ஆண்டு தோல்வியுற்று பின்னர் -1970 ஆம் ஆண்டு பதவிக்கு வந்ததும் ஒரு நிராகரித்த என்.எம். பெரேரா, கொல்வின் போன்றோர் ஆட்சியில் இருந்தது பௌத்தம் என்ற முகமூடியுடனேயே.

மகா சங்கத்திற்கும், சிறில. சுதந்திரக்கட்சிக்குமிடையில் இருக்கும் இந்த வரலாற்றுத் தொடர்பைப் பிறப்பில் கிறிஸ்தவராக இருந்து பௌத்தனாக மாறிய எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்கவைப் போன்று பரம்பரை பௌத்த மதத் தலைவியாகிய சிறிமாவும் நன்கு அறிந்திருந்தார் பண்டாரநாயக்கா தான் மரணத்தறுவாயில் இருந்த வேளையிலும் தன்னைக் கொல்ல வந்தவர் புனித காவி உடையில் வந்தவர் என்பதால் அவரை மன்னித்து விடுமாறு கூறி மறைந்தார். அதற்குக் காரணம் பிக்குகளுக்கெதிராக மக்கள் கிளர்ந்து எழுந்தால் தமது கட்சி பின் நாளில் பிக்குகளின் ஆதரவை இழந்து அழிவுக்குள்ளாகிவிடும் என்று எண்ணியதாலாகும்.

முன்னர் குறிப்பிட்ட ஞானசீக தேரரின் உந்துதலால் கட்சியையும், ஆட்சிப் பொறுப்பையும் ஏற்ற சிறிமாவோ தனது வாழ்நாள் முழுவதும் மகா சங்கத்தினருக்கு முதலிடம் கொடுத்தமையானது தனது கட்சிக்கு அவர்கள் பிராணவாயு அளிப்பவர்கள் என்று தெரிந்து வைத்திருந்தமையாலாகும். அன்று சிறில சுதந்திரக்கட்சியும் பண்டாரநாயக்கவும், சிறிமாவும் பிக்குகளை

யில் அம்முன்னணியின் தலைவர்களான மாபிட்டிகம புத்த ரக்சித்த, தல்பாவில சீலவங்ச, பத்தேகம விமலவங்ச, தேவமொட்டாவே அமரவங்ச, தெகம்மன சுமனஜோதி ஆகியோருக்கு ஒரு அரசியல்வாதியின் தலைமை தேவையாக இருந்தது. அவர்களின் முதலாவது தெரிவாக இருந்தவர் அப்போது அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்த டட்லி சேனநாயக்க ஆவார். ஆயினும் அவர் அதனை தயவுடன்

**உப்புள் ஜோசப் பர்ணாந்து**

(லங்காதீப)

தமிழில் : **வடிவேல்**

நிராகரித்தார். அதன் பின்னர் அவர்கள் சென்றது அப்போது ஐக்கிய தேசியக்கட்சியைத் தோல்வியுறச் செய்யக் கனவு கண்டு கொண்டிருந்த பண்டாரநாயக்கவிடம் அதுவே தருணம் எனக் காத்திருந்த பண்டாரநாயக்க ஒரே மூச்சில் அதற்கு இசைந்தார்.

பிக்குகள் ஒன்று சேர்ந்து

தியா வெள்ளையர் கூட அந்தத் தேரரை தாக்கவில்லை. அவர்களுக்கு பிக்குமாரிடம் நிலையை விளக்கி ஒத்திசைவோடு நிர்வாகம் நடத்த வேண்டிய தேவை காணப்பட்டது. காவி தரித்த பிக்குகளை அவர்கள் பெருமையாக மதித்தனர். அதற்கு அவர்களுக்கு அவசியமிருக்கவில்லை. அவர்களை அந்நேரம் வெள்ளையர்கள் தாக்க நினைதிருக்கலாம். அவ்வாறு செய்ய முயற்சிக்காதது பிக்குகளின் ஒத்துழைப்பின்றி நிர்வாகம் நடத்த முடியாது என சிந்தித்ததாலேயே.

கண்டி ராஜ்யத்தைக் கைப்பற்றியபின் வெள்ளையின அதிகாரிகள் பிக்குகளைக் கண்டு வணங்கியும் சென்றுள்ளனர். அவர்களின் சுகதுக்கங்களை விசாரித்தனர்.

அவர்களிடமிருந்து விடுதலை பெற்ற சிங்கள ஆட்சியாளர்கள் இப்போது பிக்குகளை தாக்குகின்றனர். தனது வழிக்கு கொண்டுவர முயல்கின்றனர். இப்போது வெள்ளையர் என்ன நினைப்பரோ? வெள்ளையர் என்ன நினைத்துச் சிரித்தாலும் விடுதலைப் புலிகள் கடைவாயில் சிரிப்பர் என்பதில் சந்தேகமில்லை.

# கருணாவுக்கு பாதுகாப்பு வழங்க ஜாதிக ஹெல உறுமய கோருகிறது

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய அதிகாரிகளைக் கோரியுள்ளது.

இவ்விடயம் குறித்து ஜாதிக ஹெல உறுமய வெள்ளிக்கிழமை இரவு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. கருணா ஒரு காலத்தில் ஆயுதம் தாங்கி இராணுவத்தினருக்கு எதிராகப் போராடிய போதிலும் தற்போது ஆயுதங்களைக் கைவிட்டு சனநாயக வழிமுறையில் கிழக்கை ஆட்சி செய்ய அவர் விரும்புவதாக தெரிவித்த ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர், நாட்டின் நலனைக் கருத்திற் கொண்டு இவ்விடயத்தில் கருணாவிற்கு அனைத்து உதவிகளும் வழங்கப் படவேண்டும் என அறிக்கையொன்றில் வலியுறுத்தியுள்ளார்.

# குணசிங்கபுர கொலைக்கு தனிப்பட்ட பகையே காரணம்

## சிறிலங்காப் பொலிசார் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு குணசிங்கபுர தொடர்மாடியில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற கொலைச்சம்பவம் தனிப்பட்ட பிரச்சினையின் காரணமாகவே நிகழ்ந்துள்ளதாக சிறிலங்கா காவல்துறையின் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. நேற்று முன்தினம் நண்பகல் மட்டக்களப்பைச் சேர்ந்த பெண் ஒருவர் குணசிங்கபுர தொடர்மாடியில் வைத்து கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக கருத்துரைத்துள்ள காவல்துறை தனிப்பட்ட குரோதமே இதற்குக் காரணமாக இருக்கலாம் எனவும்,சம்பவம் சம்பந்தமாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

(32)

# கடந்த வாரத்தில்....

## 17.06.2004 → 23.06.2004

### 17.

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்குரிய தடைகள் பற்றியும் அவற்றை எவ்வாறு அகற்றுவது என்பது பற்றியும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தத்துவ ஆசிரியரும், அரசியல் ஆலோசகருமான அன்ரன்பால சிங்கத்தை லண்டனில் சந்தித்து இலங்கைக்கான நோர்வே சமாதானத்தூதுவர் எரிக்சூல் ஹெய்ம், நோர்வே வெளிநாட்டு அமைச்சின் அதிகாரி லிசாகோல்ட் ஆகியோர் கலந்துரையாடினர்.

* பாக்தாத் தற்கொலை கார் குண்டு வெடிப்பில்35பொதுமக்கள்பலியாகினர்.



கார்க்குண்டுத்தாக்குதலில்

### 18.

சவுதிஅரேபியாவின் அல்-ஹைற தாத் தலைவர் அப்துல் அசீஸ்அல் முகதீல்உட்பட மூன்றுபேர் பாதுகாப்புப் படையினரால் சுட்டக் கொல்லப்பட்டனர்.

* ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் உள்ள `அமெரிக்கப் படைத்தளம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தற்கொலைத்' தாக்குதலில் அமெரிக்க வீரர் கொல்லப்பட்டார். வெளிநாட்டு ஒப்பந்தக்காரர் காயமடைந்தார்.

* வியட்னாம் நீதிமன்றம் போதைப்பொருள் கடத்திய 60பேருக்கு மரணதண்டனை விதித்துள்ளதுடன் 3பேருக்கு ஆயுட்தண்டனை வழங்கியது.

### 19.

லண்டனில் நாட்டுப்பற்றாளர் நடேசனுக்கு அஞ்சலிக்கூட்டம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவில் சிவயோகம் மண்டபத்தில் நடைபெற்றது.

* ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்க விமானங்கள் மேற்கொண்ட ஏவுகணைத்தாக்குதலில் சிறுவர்கள் பெண்கள் உட்பட 32 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.



பலியானோர் அடக்கம்

* யுத்தம் நடைபெறும் பகுதிகளில் கொள்ளைச்சம்பவங்கள் நடைபெறாமல் பாதுகாப்பதென புஷ் மற்றும் உயரதிகாரிகள் உறுதியளித்தனர்.



புஷ் உறுதிமொழி வழங்கல்

* நேபாளத்தில் பொலிஸ் வாகனம் மீது நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் 14பொலிசார், 4பொதுமக்கள் உட்பட 18பேர் கொல்லப்பட்டதுடன் பெருமளவான பொதுமக்கள் காயம்.

* பாகிஸ்தானில் பலோசில் தான் மாகாணத்தில் உள்ள விமானநிலையம் மீது இனம்தெரியாதவர்கள் மேற்கொண்ரொகெட் தாக்குதலில் விமான நிலையக் கட்டடங்கள் சேதம்.

### 20.

ஈராக்கில் ஷியாமுஸ்லிம் தீவிரவாதத் தலைவரான கார்க்கலிமையும், அவரது குழுவைச் சேர்ந்தவர்களையும் கொல்வதற்காக பலூஜாவில் அவர்கள் மறைந்திருந்ததாக சந்தேகிக்கப்பட்ட கட்டடத்தின் மீது அமெரிக்க இராணுவம் விமானக் குண்டு வீசித்தாக்கியதில் 18 பேர் கொல்லப்பட்டனர்.

* துருக்கியில் கடும் சூறாவளி வீசியதால் அதிக சேதங்கள் ஏற்பட்டன.




சூறாவழியின்கோரம்

### 21.

ரஷ்யாவின் இன்கல்கிரியா மாகாணத்தின் தலைநகரில் ஆயுதம் தரித்த சுமார் 100பேர்கொண்ட குழுவினர் பொலிஸ்நிலையம் மீது நடத்திய தாக்குதலில் மாகாணத்தின் உள்த்துறைப்பிரதி அமைச்சர் உட்பட 46 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

* உலகில் முதன் முதலாக தனியாரின் நிதியுதவிமூலம் உருவாக்கப்பட்ட ரொக்கெட்விமானம் வளிமண்டலத்துக்கு அப்பாலும் பறப்பை மேற்கொண்டது.




முதற்பறப்பு

* வோஷிங்டனில் ஒட்டிப்பிறந்த 4மாதக் குழந்தை வெற்றிகரமாக பிரிக்கப்பட்டது.




வெற்றிகரமான சத்திர சிகிச்சை

* ஈராக்கின் பஸ்ராவில் நடந்த குண்டுவெடிப்பில் ஒரு பொலிசார் உட்பட இருவர் பலியாகினர்.



பஸ்ராவில் குண்டுவெடிப்பு

* அலாஸ்காவில் ஏற்பட்ட தீவிபத்து சுமார் 90 மைல் வீதியில் போக்குவரத்து தடைசெய்தது.



தீ விபத்தால் பாதிப்பு

### 22.

சீனாவின் மஞ்சல் ஆற்றிலே சுற்றுலாப் பயணிகளுடன் சென்ற படகொன்று கவிழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்ததுடன் 40பேர் காணமற் போயினர்.

### 23.

மிகப்பெரும் இராணுவப்படை நடவடிக்கைக்காக இஸ்ரேல் இராணுவம் பலஸ்தீனத்தின் மேற்குக்கரை நகரமான ரப்லஸ் பகுதிக்குள் சென்றது.

---

# வட்டக்கச்சி வைத்தியசாலை பாவனைக்கு அம்பியுலன்ஸ் வண்டி வழங்க ஏற்பாடு

## -மின்பிறப்பாக்கியொன்றும் வழங்கல்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி வைத்தியசாலையின் பாவனைக்கென ஒருமில்லியன் ரூபாய் பெறுமதியான அம்பியுலன்ஸ் வண்டி வழங்கப்படவுள்ளது.

இதனைக் கொழும்பு சென்று எடுத்து வந்து ஓரிரு வாரத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 23.06.2004 அன்று ஜப்பானின் அம்டா(AMDA) நிறுவனத்தினரால் இவ்வைத்தியசாலைக்கு மின்பிறப்பாக்கியினை வழங்கிய நிகழ்வில் கலந்து கொண்ட கிளிநொச்சிப் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ரி.சத்தியமூர்த்தி இதனைத் தெரிவித்தார்.

இந் நிகழ்வின் போது மின்பிறப்பாக்கிக்கான கட்டடத்தின் நாடாவை அம்டா(AMDA) நிறுவன இணைப்பாளர் வெட்டித்திறந்து வைத்தார். வரவேற்புரையினை வைத்தியசாலை அபிவிருத்திச்சபை உத்தியோகத்தர் பி.திருக்கேதீஸ்வரன் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து இந் நிகழ்வின் தலைமையுரையினை டாக்டர் ரி.சத்தியமூர்த்தி வழங்கினார். இதன்போது ஜப்பானைத் தலைமையமாகக் கொண்ட அம்டா நிறுவனம் வட்டக்கச்சிப் பிரதேச மக்களின் வசதிகருதிமிகப் பெறுமதியான மின்பிறப்பாக்கியை வழங்கியுள்ளதாகவும், இதன் மூலம் ஏற்புவலி மகப்பேற்றின் பின் ஏற்படும் ஊசிவகைகளை குளிசாதனப் பெட்டியில் வைத்து மக்களுக்கு பயன்படுத்தமுடியும் எனவும் கூறியுள்ளார்.

சிறப்புரையினைத் தருமபுரம் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி எஸ். பொன்னுத்துரை வழங்கினார். நன்றி உரையினை வட்டக்கச்சி பொறுப்புவைத்திய அதிகாரி திருமதி.கு.வீரபத்திரபிள்ளை நிகழ்த்தினார். (12)

# உள்ளூராட்சி உதவியாளர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை

(திருமலை)

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளின் கீழ் கடமையாற்றும் பட்டதாரிகளான உள்ளூராட்சி உதவியாளர்கள் 52 பேர் விரைவில் நிரந்தரமாக்கப்படவுள்ளனர்.

மாகாணப் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பதவி உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கையினை உ[illegible]ாட்சி ஆணையாள[illegible]டாக [illegible] காண்டுள்ளார்

கடந்த 17-5-1999 முதல் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சால் நியமிக்கப்பட்டு பொது நிர்வாக அமைச்சிடம் உள்வாங்கப்பட்டனர்.

மூன்று வருட தகுதிகாண் காலத்தையடுத்த 17-05-2002 இல் பதவி உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

# ரயில்வே அதிகார சபையை ரத்துச்செய்ய அரசு முடிவு

(கொழும்பு)

அரசாங்கம் தனது தேர்தல்வாக் குறுதிகளில் ஒன்றை நிறைவேற்றும் பொருட்டு ரயில்வே அதிகார சபையை ரத்துச்செய்ய தீர்மானித்துள்ளது.

கடந்த புதன் கிழமை பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து இவ்வனுமதியை வழங்கியுள்ளனர். இப்பிரேரணை போக்குவரத்துத் துறை அமைச்சர் பெலிக்ஸ் பெரேராவினால் முன்வைக்கப்பட்டது. கடந்த ஆட்சியின் போது ஒரு வெறுக்கத்தக்க அதிகார சபையாக ரயில்வே ஊழியரால், மக்களால் எதிர்க்கப்பட்டு வந்ததாக அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர கூறினார். அவர் அரசாங்கம் ரயில்வே சேவையினை ஒரு பயனுள்ள சேவையாக அபிவிருத்தி செய்யத் தீர்மானித்துள்ளதாகவும் கூறினார்.

## சிரமதானப்பணி

சூழல்பாதுகாப்பு தினத்தையொட்டி நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வளாகத்தை கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஒழுங்கு படுத்தல்

நிதித்துறை ஆயபகுதியினரும் கிளிநொச்சி மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டனர் இப்பணியில் சுமார் 60பேர் வரையில் பங்குபற்றினர். நண்பகல் 12மணியளவில் இச்சிரமதானப் பணிநிறைவு பெற்றது.

# நியாப் திட்டத்தின் கீழ் உலகவங்கி 67.7 மில். உதவி

வட-கிழக்கு மாகாணங்களில் விவசாய அபிவிருத்தியை முன்னேற்றும் வகையில் உலகவங்கி நியாப்திட்டத்தின் கீழ் கடனுதவியை வழங்கியுள்ளது. கடந்த வியாழனன்று இதற்கான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது இதற்கமைய 67.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை உலகவங்கி வழங்கியுள்ளது. (32)

# கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம்

## - மீட்டல் பயிற்சி -

### கண்ணிவெடி விழிப்புணர்வு வார நிகழ்வுகளின் மூலம் நாம் அறிந்துகொண்டவை என்ன?

- எமது மண்ணில் இலட்சக்கணக்கிலான கண்ணிவெடிகளும் வெடிபொருட்களும் மறைந்து கிடக்கின்றன.
- அவை எந்நேரமும் வெடிக்கக்கூடிய நிலையில் இருப்பதுடன் எமது உயிருக்கும் உடலுக்கும் சவாலாயிருக்கின்றன.
- அடையாளம் காணப்பட்ட இடங்களில் மட்டுமே பாதுகாப்பு வேலிகள் இடப்பட்டுள்ளன. ஏனைய இடங்கள் அடையாளம் காணப்படவில்லை. அல்லது வேலியிடப்படவில்லை.
- புதிய இடங்களுக்குச் செல்லும்போது ஏற்கனவே பாவனையிலுள்ள பாதைகளையே பயன்படுத்தவேண்டும்.
- ஐமிச்சமான பொருட்களைத் தொடாமலிருப்பதுடன் அவை சம்பந்தமான தகவல்களை உரியவர்களுக்கு அறியத்தரவேண்டும்.
- அபாயக் குறியீடுகளையும், எச்சரிக்கைப் பலகைகளையும் அனுசரித்து நடப்பதுடன் அவற்றைப் பாதுகாக்கவும் வேண்டும்.
- குடியிருக்கும் கிராமத்தின் பாதுகாப்பு சம்பந்தமாக பூரணமாக அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.
- தடைசெய்யப்பட்டுள்ள பகுதிகளுக்குள் எக்காரணம் கொண்டும் உட்செல்லக் கூடாது.
- காணிகளைத் துப்பரவுசெய்து தீயிடும்போதும், குழிகளை வெட்டும்போதும் மிகவும் அவதானத்துடன் செயற்படவேண்டும்.
- இரண்டாயிரமாம் ஆண்டு தொடக்கம் இது வரையில் இடம்பெற்ற கண்ணிவெடி, வெடிபொருள் விபத்துக்களில் 236 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 29பேர் இறந்துமுள்ளனர். வன்னி மக்களாகிய நாம் விழிப்புணர்வின் தேவைகளைப் பூரணமாக உணர்ந்தால் மட்டுமே விபத்துக்களை இல்லாதொழிக்க முடியும்.
- கண்ணிவெடி மற்றும் வெடிபொருள் சம்பந்தமான எல்லாப் பிரச்சினைகளையும் வெண்புறா நிறுவனம் அல்லது கண்ணிவெடி அகற்றும் பிரிவினருடன் பரிமாறிக்கொள்ளவேண்டும்.

(சி-9738)

**யுனிசெவ் வெண்புறா - வன்னி**


# சேரன் சுவையகம்

சேரன்

28.06.2004 ஆம் நாளிலிருந்து சேரன் சுவையகம் கூடுதல் வசதிகளுடன் மீள் ஒழுங்குபடுத்தப் பட்டுத் தனது சேவையைத் தொடர்கின்றது என்பதனை அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

## இங்கு

★ வெளி விற்பனைப்பகுதி (TAKE AWAY COUNTER)

- O குளிர்களி (ICE CREAM)
- O பழச்சாறுகள் (FRESH FRUIT CRUSH)
- O வெதுப்பக உற்பத்திகள் (BAKE HOUSE PRODUCTS)

★ மேலும் பல புதிய பல்வேறுபட்ட சுவைகளில் பன்னாட்டு உணவுகள் பரிமாறும் பகுதி (NEW VARITIES OF FOREGIN AND LOCAL FOODS)

★ அமைதியான குளிரூட்டப்பட்ட மதுபானப்பகுதி (NICE AND AIR CONDITIONED BAR)

★ வாகனத்தரிப்பிட வசதி (PARKING FACILITIES)

போன்ற சிறப்பு வசதிகளுடன் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

முகவரி :- கண்டிச்சாலை,
கிளிநொச்சி.
தொலைபேசி எண்:>> 021-2285765<< Telephone No.

(சி-9868)

Address:- Kandy Road,
kilinochchi.

# இந்.இற்கு வருடாந்தம் 300 கோடி டொலர் கடனாக வழங்க உலக வங்கி முடிவு

(புதுடில்லி)

இந்தியாவுக்கு உலக வங்கியிட மிருந்து ஆண்டொன்றுக்கு 300 கோடி டொலர் கடனாக வழங்கப் படும்.

இவ்வாறு உலக வங்கியின் தெற்காசியப் பகுதிக்கான துணைத் தலைவர் ப்பிரவீண் பட்டேல் கூறி யுள்ளார்.

இந்தியாவின் கிராமங்களில் வாழ்க்கை முறை, மனித ஆற்றல் கட்டமைப்பு ஆகியவற்றை மேம் படுத்துவதற்கே உலக வங்கி இந்த நிதி உதவியைச் செய்யவுள்ளது என அவர் கூறியுள்ளார்.

சமூக இலட்சியங்களும், வரு வாய் ஒழுங்கும் ஒன்றுக்கொன்று துண்ணயாக இருக்க வேண்டும். தனியார் தொழில்களுக்குள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்தி அரசின் செயற்பாடுகளை மேம்படுத்துவது தான் சீர்திருத்தம் என்று இந்தியப் பிரதமர் கூறியுள்ளதை உலக வங் கித் தெற்காசியத் தலைவர் வர வேற்றுள்ளார்.


முல்லை மாவட்ட நுண்கலைக் கல்லூரி
ஆனி மாதக் கலைவிருந்து

காலம் : 30.06.2004 புதன் மாலை 4.00 மணி
இடம் : புதுக்குடியிருப்பு நுண்கலைக்கல்லூரி மண்டபம்

நிகழ்ச்சிகள்

4.00 : தேசியக்கொடியேற்றல், அகவணக்கம்,
மங்கல விளக்கேற்றலுடன்,
நுண்கலைக் கல்லூரியின் தற்காப்புக் கலைப்பிரிவு
மாணவர்களின் வீரக்கலை நிகழ்வுகள்
4.30 : நுண்கலைக் கல்லூரி மாணவர்கள் வழங்கும்
தாள வாத்தியக் கச்சேரி
மிருதங்கம் : திரு. இதயராஜ் (நவம் அறிவுக்கூடம்)
மிருதங்கம் : செல்வி.சுடர்விழி (நவம்அறிவுக்கூடம்)
5.00 : சிறப்புத் தமிழிசை விருந்து
பாட்டு : சங்கீதபூசணம் திரு.பி.குமாரசாமி
(விரிவுரையாளர்-கோப்பாய் ஆசிரிய கலாசாலை)
வயலின் : இசைஞான சுரபி திரு.A.ஜெயராமன்
மிருதங்கம் : இசைக்கலைமணிதிரு.K.கண்ணதாசன்
கடம் : கலாவித்தகர் திரு.S.ஹரிதரன்
முகர்சிங் : கலாவித்தகர் திரு.N.சதீஸ்குமார்
தபேலா : கலாவித்தகர் திரு.சதா.வேல்மாறன்

அனைவரும் கலந்து இசை இன்பம் பெற வேண்டுகிறோம்.

வாழ்த்துவோர்-கலைமகள் அழகுமாடம் புதுக்குடியிருப்பு (4751)
நுண்கலைக் கல்லூரியினர்


## தீர்ப்பை உடன் பெறுக

(புதுடில்லி)

காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பாக உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பை உடனடியாகப் பெற வேண்டும்.

இவ்வாறு புதிய தமிழகம் கட்சி மத்தியரசிடம் கேட்டுக் கொண் டுள்ளது. மாநிலங்கள் மறுசீரமைப் பிற்கான இரண்டாவது ஆணையம் அமைக்கப்பட வேண்டும், நெச வாளர்களைப் பாதிக்கும் வரியை நீக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட பிற் படுத்தப்பட்ட மக்களுக்குரிய பின் னடைவுப் பணி இடங்களைத் தமிழக அரசு உடனடியாக நிரப்பக் கோர வேண்டும் என்றும் அக்கட்சியின் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

# போட்டி நிலவும் ஒன்பது மாநிலங்களவை உறுப்பினரைத் தெரிய இன்று வாக்குப் பதிவு

(புதுடில்லி)

மாநிலங்களவைத் தேர்தலில் போட்டி நிலவும் ஒன்பது இடங் களில் இன்று வாக்களிப்பு நடை பெறவுள்ளது.

இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மாநிலங்கள வைத் தேர்தலில் 65 இடங்களைப் பூர்த்தி செய்ய வாக்களிப்பு நடை பெறுவது வழமை.

65 இடங்களில் 56 இடங் களுக்குப் போட்டியின்றி உறுப் பினர்கள் தேர்வு செய்யப்பட்டுள் ளனர். ஆனால், ஒன்பது இடங் களில் போட்டி நிலவுவதால், அதற்கான வாக்களிப்பு இன்று நடைபெறுகின்றது.

சட்டமன்ற உறுப்பினர்கள் மாறி வாக்களிப்பதைத் தடுப்பதற்கு முதன் முறையாக இம்முறை வெளிப்படையாக வாக்களிக்கும் முறை கடைப்பிடிக்கப்படுகிறது.

கர்நாடகவில் நான்கு இடங் களுக்கு ஐந்து பேரும், மத்திய பிரதேசத்தில் மூன்று இடங்களுக்கு நான்கு பேரும், ஹரியானாவில் இரண்டு இடங்களுக்கு மூன்று பேரும் போட்டியிடுகின்றனர்.


முதலாம் ஆண்டு நினைவில்



பிறப்பு 01 • 04 • 1950
இறப்பு 09 • 07 • 2003

அமரர் தனுஷ்கோடி சுப்பிரமணியம் இரத்தினம்
திதி (28.06.2004)
அன்பின் உறைவிடமே - எங்கள்
அன்புத் தந்தையே
வருடம் ஒன்றானாலும் - உங்கள்
நினைவுடன்
இல.149/பாண்டியன்குளம். (சி.9859) குடும்பத்தினர்



நினைவலைகள்

3ஆம் ஆண்டு நினைவில்...



மலர்வு 17 • 07 • 1940
உதிர்வு 26 • 06 • 2001

அமரர்
திருமதி வேலாயுதபிள்ளை பராசக்தி

9ஆம் ஆண்டு நினைவில்...



தாயின் மடியில் 21 • 06 • 1970
தாயக மண்ணில் 28 • 06 • 1995

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி சிறப்புத் தளபதி
லெப். கேணல் கில்மன்/காந்தன்
(வேலாயுதபிள்ளை சிவகுமார்)
கண்டாவளை.


செப்புகின்ற வீர அண்ணன்
புலிப்படையின் தலைவன்
சிறப்பாகப் படைநகர்த்த
ஈந்தனளோ மகவை
அன்பிற்கு இருப்பிடமாம்
எங்கள் அம்மா சக்தி
அகிலாண்ட நாயகியே
எண்ணுகின்றோம் தாயே.


எம் தலைநகரின் வாசலில்
எமது கொடி அசைந்திடும்
என்ற உறுதியோடு
எம் தலைவரின் அணியில்
வித்தான உன் உடலால்
வியாபிக்கும் எம் தமிழீழம்
மலருமடா உன்கனவு
மறந்திடோம் உனது பணி

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.


உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.
கிளிநொச்சி. (4617)

### தோல்விக்கு பின்னர் சுவீடன் வீரர்கள்











## பரபரப்படையும் யூரோ கிண்ண கால்பந்து போட்டி

# காலிறுதியில் சுவீடன் அணியை வீழ்த்தி நெதர்லாந்து அரையிறுதிக்குள் நுழைவு

யூரோ கிண்ண கால்பந்து தொடரில் மூன்றாவது காலிறுதிப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் நெதர்லாந்து அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

போர்த்துக்கலின் பாரோ நகரில் நடைபெற்ற காலிறுதியாட்டத்தில் நெதர்லாந்தும் சுவீடனும் மோதின .தொடக்கம் முதலே இரு அணிகளும் மிகச் சிறப்பாக விளையாடியதால் எந்த அணியினராலும் ஆட்டநேரஇறுதி வரையும் பின்னர் வழங்கப்பட்ட மேலதிக நேரத்திலும் கோல் எதனையும் போடமுடியவில்லை.





இதனால் வெற்றி தோல்வியை நிர்ணயிக்க அதா° து இரண்டாவது அரையிறுதிக்கான அணியை தெரிவுசெய்ய தண்டஉதை வழங்கப்பட்டது.

இதில் நெதர்லாந்து 5-4 என்ற கோல் எண்ணிக் கையில் சுவீடனைவீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.மேற்படி வெற்றி மூலம் நெதர்லாந்து அணி போர்த்துக்கல் அணியை அரையிறுதிப் போட்டியில் சந்திக்கின்றது.

கிரீஸ் மற்றும் போர்த்துக்கல் அணிகள் ஏற்கனவே அரையிறுதிக்குத் தகுதிபெற்றுவிட்டன. நேற்று நள்ளிரவு நடைபெற்ற போட்டியில் வெற்றிபெறும் அணியை கிரீஸ் அணி அரையிறுதிப் போட்டியில் எதிர்த்து மோதும்.கடந்த 21 வருட காலத்தில் இரு அணிகளும் ஒன்றை ஒன்று சந்திக்காத நிலையில் இந்தப் போட்டி பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது.

27ஆயிரத்தி 762 ரசிகர்கள் அரங்கில் திரண்டிருக்க கோடிக்கணக்கான ரசிகர்கள் தொலைக்காட்சி ஊடாகவும் கண்டுகளித்த இப்போட்டியின் முதல் 90 நிமிடத்தில் இரு அணிகளும் கோல் எதனையும் பெற முடியவில்லை.

முதல் 90 நிமிட நிறைவில் இரு அணிகளும் கோல் பெறப்படாததை அடுத்து மேலதிகநேரம் வழங்கப் பட்டது.

மேலதிக நேரத்திலும் இரு அணிகளும் ஒன்றுக் கொன்று சளைக்காது மோதின. இதன்போதும் கோல்கள் எதுவும் பெறப்படவில்லை.


இதனையடுத்து அரையிறுதிக்கான அணியை தேர்ந்தெடுப்பதற்கு தண்ட உதை அறிமுகப்படுத்தப்பட்டது.

1996-2000 ஆம் ஆண்டு யூரோ கிண்ணப் போட்டிகளிலும் 1998 இல் உலகக் கிண்ணப் போட்டிகளிலும் 'பனால்டி' முறையில் அதிர்ச்சித் தோல்வி அடைந்த அனுபவத்துடனும் நெதர்லாந்து அணி களமிறங்கியது. இதில் 5-4 என்ற கோல் எண்ணிக்கையில் நெதர்லாந்து அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றது.

### வெற்றியின்மகிழ்வில் நெதர்லாந்து










# ஜாம்பவான் அணிகளின் வெளியேற்றம்; புதிய அணிகளுக்கு ஒரு மைல் கல்



போர்த்துக்கலில் நடைபெற்று வரும் ஐரோப்பிய கிண்ண கால் பந்து போட்டியின் காலிறுதிப் போட்டிகள் நேற்று நள்ளிரவுடன் நிறைவுக்கு வந்தது.

கடைசிக் காலிறுதிப் போட்டியில் செக்குடியரசு பலம் வாய்ந்த டென்மார்க் அணியை எதிர்த்து விளையாடியது.

பரபரப்பான அரை யிறுதிக் கட்டத்தை எட்டியுள்ள ஐரோப் பிய கால்பந்து போட்டியில் கிரீஸ், போர்த்துக்கல் நெதர்லாந்து அணிகள் ஏற்கனவே அரையிறுதிக்குத் தகுதிபெற்று விட்டன.

இப்போட்டியில் சாம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றுமென்று எதிர்பார்க்கப்பட்ட பல முக்கிய அணிகள் காலிறுதிச்சுற்றுக்குக் கூட தகுதிபெறாமல் வெளியேறியதும் கால்பந்து உலகின் முடிசூடா மன்னர்களும் நடப்பு சாம்பியனுமான பிரான்ஸ் அணி கிரீஸ் அணியிடம் காலிறுதிப் போட்டியில் அதிர்ச்சித் தோல்வியடைந்ததும் ரசிகர்களிடம் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.





ஜேர்மனி, இத்தாலி, ஸ்பெயின் ஆகிய அணிகள் காலிறுதி ஆட்டத்துக்கு தகுதிபெறாது கால்பந்து ரசிகர்களை பலத்த ஏமாற்றத்துக்கு உள்ளாக்கியுள்ளது.



ஜாம்பவான் அணிகள் தங்கள் தோல்விக்கு பல காரணங்களை கூறிவருகின்ற போதிலும் பலம் குறைந்த அணிகள் தடைகளைத் தாண்டி அரையிறுதிக்குள் நுழைந்திருப்பது ஒரு புதிய மைல் கல்லாகவே கருதப்படுகிறது.

அரையிறுதிப் போட்டிகள் வரும் 30 ஆம் திகதி தொடங்கி நடைபெறவுள்ளன.

### ஆசிய குரோன்றி போட்டி கொழும்பில்

ஆசிய குரோன்றி மெய்வல்லுனர் போட்டிகள் நேற்று கொழும்பில் ஆரம்பமானது.முதலாவதாக நடைபெற்ற பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் கொங்சூன் வெற்றிபெற்றார்.

ஆண்களுக்கான 100மீற்றர் போட்டியில் தாய்லாந்து வீரர் முதல் இடத்தையும் சிறிலங்கா வீரர் இரான்டாம் இடத்தையும் பெற்றனர்.

பெண்களுக்கான 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் இந்தியா தங்கம் வெனறது. ஆண்களுக்கான 400 மீற்றர்அஞ்சல் ஓட்டப் போட்டியில் இந்தியஅணி தங்கம் வென்றது.

### சுசந்திகாவுக்கு தங்கப்பதக்கம்



கொழும்பில் நடைபெற்று வரும் ஆசிய குரோன்ரி மெய்வன்மைப் போட்டியில் குறுந் துார ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்க பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் முதல் இடத்தை பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றார் அவர் எடுத்த நேரம் 23.34 வினாடிகள்.இதேவேளை ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் மஞ்சுள சமன்குமார சிறிலங்காவின் புதிய சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்.

அவர் தனது முன்னைய சாதனையை முறியடித்து 2.2மீற்றர் உயரத்தை பாய்ந்துள்ளார்.

#### -அவுஸ்திரேலியாவுக்கான சிறிலங்கா சுற்றுலா-

## நான்கு நாள் பயிற்சிப் போட்டியில் சிறிலங்காவுக்கு 05 விக்கெட்டால் வெற்றி

சிறிலங்கா கிரிகெட் அணிக்கும் அவுஸ்திரேலிய வடபிராந்திய முதலமைச்சர் அணிக்குமிடையில் நடைபெற்ற நான்கு நாள் பயிற்சி போட்டியில் சிறிலங்கா அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

இந்தப் போட்டியில் வெற்றியீட்டுவதற்கு சிறிலங்கா அணி 187 ஓட்டங்களை பெறவேண்டியிருந்தது. நேற்றைய போட்டியின் இறுதி நாளில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. சனத்ஜெயசூரியவின் விக்கெட்டை மூன்றாம் நாள் நிறைவில் சிறிலங்கா இழந்தது.

துடுப்பாட்டத்தில் டில்சான் ஆட்டம் இழக்காது 66 ஓட்டங்களையும் ரசல்ஆனல்ட் 34 ஓட்டங்களையும் திலான்சமரவீர 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

வட அவுஸ்திரேலிய அணி முதல் இனிங்சில் 419 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்சில் 9 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களையும் பெற்றது.

சிறிலங்கா அணி தனது முதலாவது இனிங்சில் 7 விக்கெட்டுக்களை இழந்து 378 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஆட்டமிழக்காது குமார் சங்கக்கார 203 ஓட்டங்களைப் பெற்றார். அதுவே சிறிலங்கா அணியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக அவுஸ்திரேலிய அணியின் முதல் இனிங்சில் லஸ்ரின் லாங்கர் 151 ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றார்.

#### -மன்னாரில் நடைபெறும் மாகாணமட்டகால்பந்து போட்டி-

## யாழ்ப்பாணம்-மட்டக்களப்பு அணிகள் இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி

(மன்னார்)

வடக்கு- கிழக்கைச் சேர்ந்த 8 மாவட்டங்களும் கலந்து கொண்ட மாகாண மட்ட கால்பந்து சுற்றுப் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று இரண்டு போட்டிகள் நடைபெற்றன.

இதில் வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து ஆடிய மட்டு அணி 3-1 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றி பெற்றது.இதில் தஸ்லிம் 2 கோல்கலையும்,நலிம் ஒரு கோலையும் போட்டனர். வவுனியா அணிசார்பில் சிறி ஒரு கோலை போட்டனர்.

அடுத்து நடைபெற்ற திருமலை, யாழ்.மாவட்ட அணிகளுக்கிடையிலான போட்டியில் யாழ்ப்பாண அணி திருமலை அணியை 2-0 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது யாழ். அணிசார்பில், சபானந்தன், தசதரன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல் வீதம் போட்டனர்.

இறுதிப் போட்டி இன்று யாழ்ப்பாண அணிக்கும் , மட்டக்களப்பு அணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

## வாழ்நாள் தடையை எதிர்நோக்கியுள்ளார் அதிவேக ஓட்ட வீரர் டிம்மான்ட்கோமரி

உலகின் அதிவேக வீரர் பட்டத்தைப் பெற்றுள்ள அமெரிக்க வீரர் டிம்மான்ட்கோமரி ஊக்கமருந்து குற்றச்சாட்டுக்கு உள்ளாகி போட்டிகளில் பங்கேற்பதிலிருந்து வாழ்நாள் தடையை எதிர்நோக்கியுள்ளார்.

29 வயதாகும் அவருக்கு அமெரிக்க போதைமருந்து தடுப்புக் கழகம் இத்தகவலை தெரிவித்துள்ளதாக பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

போட்டிகளின்போது தடைசெய்யப்பட்ட 5 வகையான ஊக்க மருந்துகளை பயன்படுத்தியதாக மான்ட்கோமரிமீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது.2002-இல் நடைபெற்ற போட்டியில் 9.78 வினாடிகளில் 100 மீற்றர் தூரத்தைக் கடந்து உலகசாதனையை பதிவு செய்துள்ளார் அவர். மேற்படி வீரர் அமெரிக்க ஓட்ட வீராங்கனை மரியன்ஜோன்சின் கணவராவார்



## சிந்தனைக்கு

ஆக்கிரமிப்பாளரின் சுவடுகளை இந்த மண் ஒருபொழுதும் சுமந்து கொள்ளாது என்பதை, எதிரிக்கு நாம் நன்கு உணர்த்தி வருகின்றோம்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 28-06-2004
மின் அஞ்சல்
Daily@eezhanatham.com
natham23ela@yahoo.com
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

## ஒப்புக்கான பேச்சு!

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு சகல தரப்பினரையும் இணைத்துக்கொள்ளும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக சனாதிபதி சந்திரிகா கூறியுள்ளமை எத்தனைதூரம் நம்பகத்தன்மை கொண்டது. எந்தளவிற்கு யதார்த்தத்தின் பாற்பட்டதாகவுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்பது இன்று ஒப்புக்குப் பேசப்படும் ஒன்றாகவே மாறிவிட்டது. சமாதானப் பேச்சுவார்த்தைகளில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகள், எதிர்பார்க்கைகள் படிப்படியாகத் தகர்ந்தும், அற்றுப்போகின்றவையாகவும் மாறியுள்ளது. இது அர்த்தமற்ற ரீதியிலான தோன்றும் அல்ல.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் இருந்தவேளை, சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தாலும், பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் என்ற நம்பிக்கை ஓரளவு மக்கள் மத்தியில் நிலவியது. ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது அந்நம்பிக்கை தகர்ந்ததாயினும், ஓரளவு எதிர்பார்க்கை இருக்கத்தான் செய்தது.

ஆனால், தற்பொழுது அவ் எதிர்பார்க்கையானது படிப்படியாகத் தளர்ச்சி கண்டு சமாதானப் பேச்சுக்கள் மீதான நம்பிக்கை மிகவும் கீழ் மட்டத்திற்குச் சென்றுள்ளது. இதற்குப் பல காரணிகள் உண்டு. இதில் ஆளும் ஐ.ம.சு.முன்னணிக்குள் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான ஒருமித்த கருத்தின்மை முக்கியமானதாகச் சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

இதேவேளை, சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்கும் வகையில் நோர்வே மேற்கொண்ட முயற்சிகளும் இதுவரை வெற்றி அளிக்கவில்லை. சிறிலங்கா ஆட்சியாளர்களின் பேச்சிற்கும் - செயலுக்கும் இடையிலான வேறுபாடே, இத்தகையதொரு சூழ்நிலைக்குக் காரணமாகும்.

இவை ஒருபுறம் இருக்க, சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீதான நம்பிக்கையைச் சிதைக்கும் வகையில் சிறிலங்கா அரசு தனது ஆயுதப் படைத் தரப்பை வலுப்படுத்தும் தீவிர முயற்சியிலும் இறங்கியுள்ளது. இதில் ஆளணிகளைப் பெருக்குதல், நவீன ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்தல், தீவிர பயிற்சி அளித்தல் என்ற ரீதியில் இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுபவையாக உள்ளன.

குறிப்பாக, சிறிலங்கா இராணுவத்திற்கென ஆள்ணியைச் சேர்க்கும் முயற்சி தீவிரமாக்கப்பட்டுள்ளது. இதில், வெற்றி கிட்டவில்லையாயினும், இதில் தொடர் முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவே உள்ளது. அத்தோடு, பல பயிற்சித் திட்டங்கள் ஊடாக இராணுவம் போரிடும் நிலைக்கு தயார் செய்யப்பட்டு வருகிறது.

அடுத்ததாக, சிறிலங்கா கடற்படைக்கும், விமானப் படைக்கும் என நவீன போர்க் கப்பல்களும், விமானங்களும் கொள்வனவு செய்யப்படுகின்றன. இதில் அமெரிக்கா அன்பளிப்பாக வழங்கும் போர்க் கப்பலும் உள்ளடங்கும். இதேவேளை, அமெரிக்க கடற்படையுடன் நெருக்கமானஉறவைப் பேணுவதற்கான முயற்சிகளிலும் சிறிலங்கா அரசு முனைப்புக்காட்டி வருகின்றது.

சிறிலங்கா அரசின் இந்நடவடிக்கையானது இராணுவ ரீதியில் பலப்படுவதன் மூலம் விடுதலைப்புலிகள் மீது அழுத்தத்தைக் கொடுக்கலாம் அன்றி போரிடும் புலிகளை தோற்கடிக்கலாம் என்ற நோக்கில் மேற்கொள்ளப்படுவதாக இருக்கலாம். இதனைத் தவிர இதற்கு வேறு காரணங்கள் எதுவுமே இருக்க முடியாது.

இதேவேளை, சிறிலங்கா அரசின் இத்தகைய போக்கிற்கு இப்பிராந்தியத்தில் தமது தீவிர அக்கறையைச் செலுத்தத் தொடங்கியுள்ள அமெரிக்காவின் ஒத்துழைப்பு கிட்டலாம் என்ற நம்பிக்கை காரணமாக இருக்கலாம். இவ்வாறு சிறிலங்கா அரசு நம்பிக்கை கொள்வதற்கு ஏற்றதொரு சூழ்நிலையும் இல்லாமல் இல்லை. அதாவது, சிறிலங்காவிற்கு இராணுவ ரீதியிலான சில உதவிகளை வழங்க அமெரிக்கா தயாராக இருப்பதற்கான சமிக்ஞைகள் வெளிப்படுபவையாகவே உள்ளன.

தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை இராணுவ ரீதியில் தோற்கடிக்க கடந்த காலத்திலும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுக்கு. அதற்கெனச் சிறிலங்கா இராணுவம் வீங்கிப்பெருத்தது. இதனால் பெருமளவான நவீன ஆயுத தளபாடங்கள் பல நாடுகளிலும் இருந்து கொள்வனவு செய்யப்பட்டதும் உண்டு. ஆயினும் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தை இராணுவரீதியில் வெற்றிகொள்ளுதல் சாத்தியமாகவில்லை.

இந்நிலையில் மீண்டும் ஒரு இராணுவத்தீர்விற்கோ அன்றி இராணுவ ரீதியான அழுத்தத்தைப் பிரயோகித்தல் என்பதோ எத்தனை தூரம் சிறிலங்காவிற்கு நன்மை பயக்கும் என்பது கேள்விக்குரியதே. சிலவேளை உலகவல்லரசின் ஆதரவால் நவீன ஆயுதங்களும், பயிற்சியும் ஒத்துழைப்பும் கிடைக்கப்பெறலாம் எனச் சிறிலங்கா ஆட்சியாளர்கள் நம்பிக்கை கொள் வாரேயானால் இவர்கள் நவீன ஆயுதங்கள் மட்டும் வெற்றியைத் தேடித்தராது என்ற கடந்த வரலாற்றை மட்டுமல்ல,உலக நிகழ்கால நடப்புக்களையும் கூடப்புரிந்துகொள்ளாதவர்களாகவே இருக்க முடியும்.

# இலங்கையின் துறைமுகப்பாதுகாப்பு பணிகள் முழுமைப்படுத்தப்பட்டன

### -சர்வதேச துறைமுக அதிகார சம்மேளனத்துக்கு அரசு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் துறைமுக பாதுகாப்புப்பணிகள் முழுமைப் படுத்தப்பட்டுள்ளதாக துறைமுக கப்பல் தொழிற்துறை அமைச்சின் செயலர் சர்வதேச துறைமுக அதிகார சம்மேளனத்துக்கு அறிவித்துள்ளார்.ஏற்கனவே ஐக்கிய தேசிய கட்சி அரசாங்க காலத்தில் துறைமுகங்களின் பாதுகாப்புப் பணிகள் துறைமுக அதிகார சபையின் பாதுகாப்பு ஊழியர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. எனினும் புதிய அரசாங்கத்தால் துறைமுக பாதுகாப்புப் பணிகளை மீண்டும் கடற்படையினரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது. சர்வதேச துறைமுகஅதிகாரசம் மேளனத்தின் 2002 ஆம்ஆண்டு தீர்மானத்தின்படி கால நியமப்படி எதிர்வரும் ஜீலை முதலாம் திகதி முதல் உலகின் அனைத்து சர்வதேசதுறைமுகங்கள் கடற்படையினரின் முழுமை பாதுகாப்பின் கீழ் வர வேண்டும் என்பதாகும். இதன் அடிப்படையில் இலங்கையில், கொழும்பு, காலி, காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை ஆகிய துறைமுகங்களின் பாதுகாப்புப் பொறுப்பை கடற்படையினர் பொறுப்பேற்றுள்ளனர். (32)

### மத்தியவங்கி மீளப் பெற்ற

# 20 கோடிரூபா பண நோட்டுக்களை மீண்டும் புழக்கத்தில் விடத் தீர்மானம்

இலங்கையில் மீண்டும் ஒரு தொகுதி ரூபா நோட்டுக்களை புழக்கத்தில் கொண்டு வர மத்திய வங்கிதீர்மானம் மேற்கொண டுள்ளது ஏற்கனவே மிகை பண நிரம்பல்காரணமாக சுமார் 20 கோடி ரூபா பெறுமதியான 500 மற்றும் 1000ரூபாநோட்டுக்கள் மத்தியவங்கியினால் திரும்ப பெறப்பட்டிருந்தன. எனினும் தற்சமயம் நாட்டில் உற் பத்திகள் இன் றிபணத் தட் டுப் பாடு ஏற்பட்டிருப் பதால் அந்த 20 கோடி ரூபாபெறுமதியான நோட்டுக் களையும் புழக்கத்தில் விட மத்திய வங்கி தீர்மானம் எடுத்துள்ளது. இதன் காரணமாக மத்திய வங்கியினால் தற்காலிக நன்மைத் தீர்வு ஒன்றையே எதிர்பார்க்க முடியும்.ஆனால் மறுபுறத்தில் இதன்காரணமாக நாட்டில் தற் போது உள்ள பணவீக்கம் இரண்டு மடங்காக அதிகரிக்கும் என பொருளியல் அறிஞர்கள் கூறுகின்றனர். (32)

# பிரதேச சபைத் தலைவர் துப்பாக்கிச் சூட்டில் காயம்

(கொழும்பு)

சிறிலங்காவில் பிரதேச சபைத் தலைவர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டு படுகாயமடைந்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் உள்ள மகாவ பிரதேச சபையின் தலைவரே கடந்த வெள்ளியன்று வீட்டில் இருந்த போது இனந் தெரியாத மூவரால் சுடப்பட்டதை அடுத்து ஆபத்தான நிலையில் குருநாகல் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ரீ-56ரகதுப்பாக்கியினாலேயே இவர் சுடப்பட்டுள்ளதாகவும் அரசியல் பகைமையே இதற்குக் காரணம் என தாம் நம்புவதாகவும் பொலிசார் கூறியுள்ளனர்.

# பொலிஸ்காரரைத் தாக்கி காதைக் கடித்த குழுவினர்

(சிலாபம்)

பெலிஸ்காரர் ஒருவரின் காது கடிக்கப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் சிலாபம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.சென்ற வியாழன் இரவு இடம் பெற்ற இச்சம்பவம் பற்றிதெரியவருவதாவது;

குறித்த பொலிஸ்காரரும் மற்றுமொரு காவலரும் உணவு எடுப்பதற்காகமோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது சுமார் இருபதுபேர்கொண்ட கும்பலொன்று இவர்களை வழிமறித்துத் தாக்கியது.

அப்போது தாக்கியவர்களில் ஒருவர் இப்பொலிஸ்காரரின் காதொன்றை பலமாகக் கடித்து காயப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து காயமடைந்த இருபொலசாரும் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டனர்.

# அரச அச்சகத்தில் தீவிபத்து: நாசவேலையா எனச்சந்தேகம்

(கொழும்பு)

அரசாங்க அச்சகத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீவிபத்திற்கு நாசவேலை காரணமாக இருக்கலாம் என காவல்துறையினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். நேற்று முன்தினம் மாலை 5.45 மணியளவில் அச்சகத்தில் பணிகள்யாவும் நிறைவடைந்து அச்சகத்தின் திறப்பும் காவலாளியிடம் ஒப்படைக்கப் பட்டது. ஆனால் இதன் பின்னர் தீவிபத்து மாலை6.45மணியளவில் அளவிலேயே இடம்பெற்றுள்ளது. இந்த நிலையில் நேற்றுக் காலை ஸ்தலத்துக்கு விரைந்த அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர்கள் நாசவேலை குறித்த தகவல்களை வெளியிட்டுள்ளார்கள். இத் தீவிபத்தில் அச்சகத்தின் பொறியியல் பகுதியின் களஞ்சிய அறை சேதமாகியுள்ளது. என்றாலும் மொத்த சேத விபரம் வெளியிடப்படவில்லை.

# 12000 பேரை பொலிஸ் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யத்திட்டம்

சிறிலங்கா காவல்துறைக்கு மீண்டும் ஒரு முறை ஆட்சேர்ப்பு நடத்தப்படவுள்ளது. இதற்கான ஆலோசனையை மக்கள் பாது காப்பு நல்லிணக்க அமைச்சு தெரி வித்துள்ளது. இந்த ஆலோசனை இன்றைய தினம் சனாதிபதியின் கவனத் திற்குமேற்படி கொண்டுவரப் படவுள்ளதாக அமைச்சு அறி வித்துள்ளது அமைச்சின் ஆலோசனைபடி காவல்துறைக்கு 12 அயிரம் பேர்சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். ஏற்கனவே 10ஆயிரம் பேர் என்ற இலக்கில் இராணுவத் துக்கும் ஆட்சேர்ப்புக்கள் இடம் பெற்றுக்கொண்டிருகின்றது.

# மக்களின் யதார்த்த வாழ்விற்கு பயன்தரும் கல்விமுறை இலங்கைக்கு அவசியம்

### பாங்கொக் பல்கலைக்கழகத் தலைவர் தெரிவிப்பு

மக்களின்யதார்த்த வாழ்விற்குப் பயன்தரக்கூடிய கல்விமுறை இலங்கையில் அறிமுகஞ் செய்யப் படுதல் மிகவும் அவசியமானது.

இவ்வாறு தாய்லாந்து நாட்டின் முன்னாள் தொழில்நுட்ப அமைச்சரும் பாங்கொக் பல்கலைக்கழகத் தலைவரும் "நாசர்" விஞ்ஞானியுமானஅர்குங்ஓங்யும் தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றைமேற்கொண்டு யாழ்ப் பாணம் வந்திருக்கும் இவர் நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கூட்டம்ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதேஅவர்இதனைத் தெரிவித்தார்.தற்போது இங்குள்ள கல்வி நிலையில் மாற்றம் செய்யப்பட்டு மக்களின் யதார்த்த வாழ்விற்குப் பொருத்தமான கல்வித்துறை அறிமுகஞ் செய்யப்படுதல் அவசியம். இதன்மூலமே பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வில் சிறந்த மாற்றங்கள் உருவாகும், பொருளாதார மேம்பாட்டில் மாற்றத்தை உருவாக்கமுடியும்.

இதேபோல மக்களிடையே நல்ல ஊடகங்கள் அறிமுகம் செய்யப்பட்டு வன்செயல்களையும் கலாசாரமற்றும் சமூக சீரளிவுகளை ஏற்படுத்தக்கூடிய ஊடகங்களின் ஆதிக்கத்தை அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது. இதற்கு சிறிலங்கா அரசு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

எனவே இவ்வாறான மாற்றங்களை உருவாக்கி மக்களின் யதார்த்த வாழ்விலும், கல்வி மேம்பாட்டிலும் மாற்றத்தை உருவாக்குவதாயின் இங்கு ஒரு நல்லாடசியும், நல்லரசும் நிலைபெறுதல் அவசியம்எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (33)

# ஹெய்ட்டியில் கலகத்தடுப்பிற்கு சிறில.படையினர் அனுப்பப்படுவர்

## - சிறிலங்கா இராணுவத்தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

ஹெய்ட்டி நாட்டில் கலகத்தடுப்பில் ஈடுபடும் முகமாக சிறிலங்கா இராணுவத்தினர் அங்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர். சுமார் 750 பேரைக் கொண்ட சிறிலங்கா இராணுவப் படையினரே ஹெய்ட்டி நாட்டுக்கு அனுப்பப்படவுள்ளதாக இராணுவத் தளபதி லெப்ஜெனரல் பலகல்ல தெரிவித்துள்ளார். 5 நாடுகள் பங்கேற்ற ஐக்கிய நாடுகள் சமாதானப் படை பயிற்சி நிறைவு வைபவம் நேற்று இரத்தினபுரியில் அமைந்துள்ள குக்குளேகங்க என்ற இடத்தில் நடைபெற்றது. கடந்த 12 ஆம் திகதி ஆரம்பமான இந்தப் பயிற்சி நிகழ்வில் பங்களாதேஷ்,நேபாளம்,மொங்கோலியா, அமெரிக்கா. மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் இராணுவத்தினர் பங்கேற்றனர். நேற்று இந்த நிகழ்வின் இறுதி படை அணிவகுப்பும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம் பெற்றது. இதன்போது பயிற்சியில் பங்கேற்ற நாடுகளின் இராணுவத் தளபதிகள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

நிகழ்வில் உரையாற்றிய சிறிலங்காவின் இராணுவத் தளபதி, எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் சிறிலங்காப் படையினர் ஹெய்ட்டிக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.நாடு ஒன்றின் கலகத் தடுப்புக்காக தமது இராணுவத்தினர் அனுப்பப்படும் முதற் சந்தர்ப்பம் இதுவெனக் கூறிய இராணுவத் தளபதி லயனல் பலகல்ல, இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடன் சமாதானப் பயிற்சி நடத்தப்பட்ட முதற் சந்தர்ப்பமும் இதுவாகும் எனக் குறிப்பிட்டார். எதிர்காலத்தில் இவ்வாறு தமது படையினர் ஏனைய நாடுகளுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். இதேவேளை லயனல் பலகல்ல கலந்து கொண்ட இறுதி வைபவம் இதுவென அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 30 ஆம் திகதி அவர் சிறிலங்காவின் 16 ஆவது இராணுவத் தளபதிப் பதவியில் இருந்து ஓய்வு பெறுகிறார். (32)

# புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் ஒரு மருத்துவர் மட்டுமே சேவையில்

## என்று நீங்கும் இந்த அவலம் என நோயாளர் கேள்வி

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் இயங்கும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை காரணமாக நோயாளர்கள் பெரும் அவலங்களை எதிர்கொண்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் ஒரு வைத்தியர் மட்டும் சேவையில் ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

நேற்றுமுன்தினம் கிளினிக் நாளாகும், எனவே கிளினிக் நோயாளர்களையும் மற்றும் வெளிநோயளர் பிரிவில் சிகிச்சை பெறவந்த நோயாளர்களையும் ஒரு வைத்தியர் மட்டுமே பார்வையிட்டுக்கொண்டிருந்தார். இதனால் நோயாளர்கள் பெரும் அவலங்களை எதிர் நோக்க வேண்டிய ஓர் துர்ப்பாக்கிய நிலையில் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த சமாதான காலகட்டத்திலும் இந்த வைத்தியசாலையில் இவ்வாறான நிலையா? என நோயாளர்கள்கேள்விஎழுப்புகின்றனர்..(08)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கிளி.யில் வதிவிடப்பயிற்சி

(அலுவலக செய்தியாளர்)

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வதிவிடப்பயிற்சியொன்று எதிர்வரும் 30-06-2004 ஆம் நாள் தொடக்கம் 04-07-2004 ஆம் நாள் வரை நடை பெறவுள்ளது.

வேள்ட்விசன் நிறுவனத்தின் நிதியுதவியுடன் தமிழர்புனர்வாழ்வுக்கழக அனுசரணையில் நடைபெறும் இப்பயிற்சிநெறியை தமிழர் புனர்வாழ்வுக்கழக முன்பள்ளி கல்வி மேம்பாட்டு பிரிவினர் நடாத்தவுள்ளனர். 05ஆம் நாள் நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறியானது கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெறவுள்ளது. எனவே இதுவரை எதுவித பயிற்சியும் பெறாத அனைத்து ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு தமிழர் புனர்வாழ்வுக்கழக கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி கல்விமேம்பாட்டு இணைப்பாளர் நிலா அவர்கள் கேட்டுக்கொள்கிறார். (ச)

# அரசிற்கெதிராக களனிவரையில் பாதயாத்திரைக்கு ஹெல உறுமய ஏற்பாடு

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய எதிர்வரும் புதன்கிழமை களுத்துறையில் இருந்து அரசாங்கத்துக்கு எதிரான பாதயாத்திரையை நடத்தவுள்ளது. அண்மையில் பாராளுமன்றத்தில் ஜாதிக ஹெல உறுமயவின் இரண்டு பிக்குமார் அரசாங்க கட்சியினரால் தாக்கப்பட்டமை தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தும் முகமாகவே இந்த பாதயாத்திரை நடத்தப்படவுள்ளது. களுத்துறை மொரட்டுவ ஊடாகக் களனி வரை இந்தப் பாதயாத்திரை மூன்று நாட்களுக்கு நடத்தப்படவுள்ளது. (32)

# டென்மார்க்கை இலகுவாக வென்ற செக்குடியரசு அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது

யூரோகிண்ண கால்பந்து தொடரின் நான்காவதும் இறுதியுமான காலிறுதிப் போட்டியில் செக்குடியரசு டென்மார்க் அணியை 3-0 என்ற கோல் எண்ணிக்கையில் தோற்கடித்து அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

நேற்ற நடைபெற்ற பரபரப்பான ஆட்டத்தில் போட்டியின் இரண்டாவது பாதியின் 48ஆவது நிமிடத்தில் கெல்லர் கோல் போட்டார். 62,65 ஆவது நிமிடங்களில் பரோஸ் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டு செக்குடியரசின் இலகுவான வெற்றிக்கு வழிவகுத்தார்.

மேற்படிவெற்றி மூலம் செக்குடியரசு கிரீஸ் அணியை எதிர்த்து அரையிறுதிப் போட்டியில் மோதுகின்றது.

# இலக்கத் தகடு வழங்கல்

துவிச்சக்கர வண்டிகளுக்கான உரிமம் (இலக்கத்தகடு) வழங்கும் நடவடிக்கையினை கரைச்சி. பிரதேச சபை தற்போது மேற்கொண்டு வருகின்றது.

எனவே துவிச்சக்கர வண்டி உரிமையாளர்கள் துவிச்சக்கர வண்டிக்கான உரிமத்தினை கரைச்சி பிரதேச சபை செயலகத்தில் அலுவலக நேரத்திலும் மற்றும் கிளிநொச்சி பொதுச்சந்தையில் உரிமம் வழங்குவதற்கென அமைக்கப்பட்டுள்ள பகுதியிலும் சென்று பெற்றக் கொள்ளலாமென கரைச்சிப் பிரதேச சபைச் செயலர் தெரிவித்துள்ளார். (சோ)

# இளம்பிள்ளை பராய விருத்தி தொடர்பான 3 நாள் செயலமர்வு

செம்மலைக் கிராமத்தில் இளம்பிள்ளை பராய விருத்தி தொடர்பான 3 நாள் செயலமர்வு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.தவராசா தலைமையில் கடந்த 23ஆம் திகதி செம்மலை இலங்கை செஞ்சிலுவைச் சங்க நிலையத்தில் ஆரம்பமானதுஇந்தச்செயலமர்வில் பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர், பொதுச்சுகாதாரப்பரிசோதகர்கள், மேற்பார்வை மருத்துவ மாது, மருத்துவ மாதுக்கள், ஆகியோர் பயிற்சிகளை வழங்கினார்கள். (20)

# இலங்கையில் வெளிநாட்டவர் காணிவாங்குவதற்குத் தடை

## அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டவர்கள் இலங்கையில் நிலம் கொள்வனவு செய்வது நிறுத்தப்படவுள்ளதாக சிறிலங்காவின் கலாச்சார அலுவல்கள் மற்றும் தேசிய உரிமைத்துவ அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும்"வரலாற்றுப் பதிவுகளின் படி வெளிநாட்டுச் சக்திகள் எமது நாட்டைத் தம்முடன் இணைத்துக்கொண்டன. மீண்டுமொரு முறை வெளிநாட்டவர்கள் இலங்கைக்கு எமது நிலத்தை வாங்க வருகின்றார்கள் என்று தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் வெளிநாட்டவர்கள் சிலர் பெறுமதியான சொத்துக்களைக் கொள்வனவு செய்ய வந்தபோது அமைச்சர் விஜித ஹேரத் எதிர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தென்னிலங்கையில் சில பகுதிகளில் ஆனைக்கால் நோய் பரவல்

(கொழும்பு)

தென்னிலங்கையின் சில பகுதிகளில் ஆனைக்கால் நோய் (பைலேரியா) பரவி வருவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.பேருவல, களுத்துறை போன்ற கரையோரப்பகுதிகளிலேயே இந்நோய் வேகமாகப் பரவுகின்றது. அண்மைய மழையினால் கைவிடப்பட்ட குளங்கள், பள்ளங்களில் மில்லியன் கணக்கில் நுளம்புகள் பெருகியுள்ளமையே இதற்குக்காரணம் எனவும் கூறப்படுகின்றது..

# ஐந்து நட்சத்திர விடுதிக்குள் செல்ல அமைச்சரின் மகனுக்குத் தடை

(கொழும்பு)

ஐந்து நட்சத்திரக் ஹோட்டல் ஒன்றின் இரவு விடுதிக்குள் செல்வதற்கு மக்கள் ஐக்கிய விடுதலை முன்னணி பாராளுமன்ற உறுப்பினரின் மகனுக்குத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேர்வின் சில்வா என்ற பாராளுமன்ற உறுப்பினரின் மகனுக்கே கொழும்பிலுள்ள பிரபல ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றின் இரவு விடுதிக்குள் செல்வதற்கே தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தடை இவருக்கு இரண்டாவது தடவையாக விதிக்கப்பட்டுள்ளதாகவும் இவரின் தந்தை தனது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி இத்தடையை விலக்க முயற்சித்ததாகவும் ஹோட்டல் கைத்தொழில்வட்டாரங்கள் கூறியுள்ளன.

இதேவேளை தனது மகன் சிறிலங்காவிலேயே இல்லை வெளிநாட்டில் இருக்கின்றார் என மேர்வின் சில்வா கூறியதாக ஆங்கில நாளிதழ் கூறியுள்ளது.

மேலும் இது குறித்து செய்தி வெளியிட்ட சிங்கள நாளிதழ் ஒன்றின் செய்தியாளர் குறித்த பாராளுமன்ற உறுப்பினரால் அச்சுறுத்தப்பட்டதாகவும் அறியமுடிகின்றது.

# கிளி. மாவட்ட வைத்திய சாலையில் இருதயநோயாளிகளுக்கு பரிசோதனை

(அலுவலக செய்தியாளர்)

இருதய வைத்திய நிபுணரினால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இருதய நோயாளர்களுக்கான வைத்திய பரிசோதனைகள் நடைபெற்றது.

நேற்றும் நேற்று முன்தினமும் கிளிமாவட்டவைத்தியசாலையில் வைத்து கொழும்பு தேசியவைத்திய சாலையில் கடமைபுரியும் இருதய வைத்திய நிபுணர் டாக்டர் பி.லக்ஸ்மன் அவர்களினால் இருதயநோயாளர்களுக்கு (எக்கோ) கருவிமூலம் இருதய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பெற்றது.

மேற்படி இரு தினங்களிலும் 75 க்கும் மேற்பட்ட இருதய நோயாளர்கள்சிகிச்சையினை பெற்றுள்ளதுடன் மூன்று சிறுவர்கள் உட்பட எண்மர் மேலதிக சிகிச்சை பெறும் பொருட்டு கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்படுவதற்கான விதப்புரைகளும் வழங்கப்பெற்றது.

அதேபோன்று அங்கோடை மனநோயாளர் வைத்திய சாலையில் கடமைபுரியும் மனநோய் வைத்தியநிபுணர்களான டாக்டர் எஸ்.சிவதாசன், டாக்டர் வஜிர தர்மவர்த்தன ஆகியோரால் கிளி மாவட்டவைத்திய சாலையில் வைத்து மேற்படி இரு தினங்களிலும் மனநோயாளர்களுக்கான சிகிச்சைகள் மேற்கொள்ளப் பெற்றது.

கிளிநொச்சி மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டின் பெயரில் வைத்திய நிபுணர்கள் வரவழைக்கப்பெற்று கிளி.மாவட்ட வைத்திய சாலையில் சிறப்புச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றது குறிப்பிடத்தக்கது. (சோ)

## கடந்....

மறுநாள் (சனிக்கிழமை) இவர்களைத் தேடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் பலனளிக்கவில்லையென கூறப்படுகின்றது. (20)

## மதமாற்ற...

தெரிவித்திருந்தது. இதனிடையே, சிறிலங்காவின் பௌத்த சாசன அமைச்சர் ரத்னசிறி விக்கிரம நாயக்க, மதமாற்றத் தடைச் சட்டம் ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குத் தயாராகி வந்தார். பாராளுமன்றத்தில் 114 ஆசனங்களுடன் கூட்டாக இணைந்திருக்கும் எதிரணியை பலவீனப் படுத்தும் வகையில் இந்த விவகாரத்தை இப்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பயன்படுத்த முனைவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# முற்பத்தி ஐயாயிரத்துக்கு மேற்பட்ட சட்டவிரோத ஆயுதங்கள் பாவனை

## விசாரணை நடத்தக் குழுவாம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள சட்டவிரோத ஆயுதங்களின் பாவனை குறித்து விசாரணை நடத்துவதற்காக மூன்று உறுப்பினர் கொண்ட குழுவொன்று சிறிலங்காவின் பொது மக்கள் பாதுகாப்பு,சட்டம் மற்றும் உத்தரவு பிரதியமைச்சர் ஜெயரத்தின ஹேரத்தினால் அமைக்கப் படவுள்ளது.

அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜ இது குறித்துத் தெரிவிக்கையில்:

35000இற்கும் மேற்பட்ட சட்டவிரோத ஆயுதங்கள் சுழற்சி முறையிலான பாவனையில் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் இவற்றின் உதவியுடனேயே அதிக குற்றச் செயல்கள் இடம் பெற்று வருவதாகவும் கூறியுள்ளார் என ஆங்கிலத் தினசரியொன்று கூறுகிறது.

## ஹொவ்டே...


புலிகளிற்கும், படைத்தரப்பினருக்கும் இடையே நடைபெற்று வந்த மாதாந்த சந்திப்புக்களிலிருந்து விடுதலைப்புலிகள் விலகிக் கொள்ளப்போவதாகஅறிவித்தமை உட்பட கிழக்கில் தற் பொழுது ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து ஆராயப்படுமெனத்தெரிவிக்கப் பட்டுள்ளது.

## கருணாவை....

எதுவும் செய்யவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.இதேவேளை கருணாவைப் பாதுகத்ததில் இராணுவத்தினர் சிலர் தொடர்புபட்டிருக்கலாம் என அமைச்சர் மங்கள சமரவீர கூறியிருந்தமை தெரிந்ததே.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# வீரவணக்கம்



கடற்கரும்புலி
**லெப். கேணல் - அமுதம்/ஈழப்பிரியா**
பாலசுப்பிரமணியம் - சுகந்தினி
பன்னாலை, தெல்லிப்பளை,
யாழ்ப்பாணம்.

**27 - 06 - 2003 அன்று**
**சர்வதேச கடற்பரப்பில்**
**ஏற்பட்ட படகு விபத்தின் போது**
**வீரகாவியமான கடற்கரும்புலிகள்**
**நினைவாக**

புலியாகி பிறப்பெடுத்து
- புதியதோர் உருவெடுத்து
சளையாது போர் தொடுத்து
- போர் ஓய்ந்த காலமதில்.
கடலிடையே பயணித்த
- கப்பலுடன் நீர் வெடித்து
காற்றோடு காற்றாக
- போனகரும் வேங்கைகளே!
நீர்துளியை கோர்த்திங்கு
சரமாக்கி உமக்கிங்கு
காணிக்கையாக்குகிறோம்.



கடற்கரும்புலி
**மேஜர் - கதிர்ஓவியன்**
செல்வன் - ஞானேஸ்வரன்
புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன்,
யாழ்ப்பாணம்.



கடற்கரும்புலி
**லெப்.கேணல் - யாழினி**
நாகரத்தினம் - நிரஞ்சினி
தோப்புக்காடு காரைநகர்,
யாழ்ப்பாணம்.



கடற்கரும்புலி
**கப்டன் - ஈகைவண்ணன்**
குகேந்திரன் - ரமணன்
நந்தாவில் அம்மன் கோவிலடி, கொக்குவில் மேற்கு,
யாழ்ப்பாணம்.

ஈழநாதம்